விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 215 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தேர்தல்கள் ஆணைக்குழு புதன்கிழமை கூடுகின்றது

### ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் புதன்கிழமை கூடவுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில் எட்டப்படும் தீர்மானத்திற்கமைய, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான திகதி மற்றும் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான 19

## விஜயதாஸவின் அமைச்சு பதவியை பறிக்கத் திட்டம்?

### உக்கிரமடைந்த ரணில் – விஜயதாஸ மோதல்



(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் அமைச்சுப் பதவியைப் பறிக்க ஜனாதிபதி ரணில் முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

22ஆவது திருத்தச் சட்டம் தொடர் 19



# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க வாய்ப்பு



### பாராளுமன்றம் கலைக்கப்படலாம்
### காமினி வலேபொட எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூலம் பாராளுமன்றமும் கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

### திடீர் சுகவீனம்

## உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

திடீர் சுகவீனம் காரணமாக உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த நிமலினி அருளானந்தம் 19



## தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள தந்தை செல்வா அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் குறித்த மாநாடு இடம்பெறவுள்ளது. (ம 7)

### நிறுவனத்தில் கொள்ளை

## யாழைச் சேர்ந்த பெண் உட்பட ஐவர் கைது

(கொழும்பு)

கொழும்பு காலி வீதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனமொன்றில் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அலுவலகத்தை இரும்புக்கம்பிகளால் தாக்கி சேதப்படுத்தி 35 இலட்சம் ரூபாய்க்கும் 19

### ஜனாதிபதித் தேர்தலில்

## தமிழ்ப் பொது வேட்பாளர் திங்கள் ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று எதிர்வரும் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட உள்ளது.

தமிழ் சிவில் சமூகத்திற்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழில் வைத்து கைச்சாத்திடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங் 19

## அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் திங்கள் முதல் மீண்டும் போராட்டம்

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் வேதன உயர்வு உள் ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சட்டப்படி தொழில் செய்யும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பில், கல்வி அமைச்சர் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் நேற்று முன்தினம் கலந்துரையாடியிருந்தது.

இந்த நிலையில், பேச்சுவார்த்தை தோல்வி 19



## பளையில் நுழைந்தது யானை துவம்சமாயின தென்னைகள்

(பளை)

பளை தர்மக்கேணிப் பகுதியில் யானையொன்று புகுந்து அங்குள்ள தென்னை மரங்களை நாசம் செய்து வருவதாக அப்பகுதி தென்னைச்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக பளை தர்மக் கேணிப் பகுதிக்குள் புகுந்த தனி யானை தென்னைகளை 19



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா வாழ்த்துக்கள்




எமது நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவர் திருக்கோயிலின் வளர்ச்சிக்கு மூன்று முறை தலைவராக இருந்து பெரும் பங்காற்றியவர்களான ஊரெழு கிழக்கு வளர்பிறையைச் சேர்ந்த

## மகேந்திரன் இரஞ்சிதமலர்

ஆகியோர் திருமண பந்தத்தில் இணைந்து இன்று 50 வது வருடத்தைக் கொண்டாடும் தங்கத் தம்பதிகளுக்குபொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

வாழ்த்துவோர் :

**ஊரெழு கிழக்கு நாவலம்பதி**
**ஸ்ரீ ஞான வைரவர் திருக்கோயில்**
**பரிபாலன சபையினர்**

(1522)

# திருமண பொன்விழா வாழ்த்துக்கள்




## மகேந்திரன் இரஞ்சிதமலர்

நந்தா விளக்கான நம் குடும்ப நாயகரே..
சிந்தை இனிக்கும் சீர்ப்பெருநாள்
தரணி போற்றும் தம்பதியரின்
ஐம்பதாவது திருமண நாள்!
மகிழ்ச்சிப் பெருங்கடலே – நறுமண
மல்லிகைப் பூந்திடலே
வித்தைக்கும் சந்ததி விருத்திக்கும்
விதையான விண்புகழ் தாயவரே
தித்திக்கும் திருநாளில் வாழிய பல்லாண்டு

மணி மாளிகை,
வளர்பிறை, ஊரெழு கிழக்கு. (1524)

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## பிரத்தியேக வகுப்பு

தரம் 10, 11 வகுப்புக்களுக்கான வரலாறு பாடம் பிரத்தியேகமாக (வீடுகளுக்கு) நடைபெறுகின்றன. கடந்தகால பரீட்சைகளும் வினாத்தாள்களும் நடைபெறுகின்றன. (1518)

**077 212 6973**

## விற்பனைக்கு

yamaha mate 90, CM 125(honda)
வோக்ஸ்வகன் ( Volkswagen )
VW 1300 8 ஸ்ரீ கார்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உள்ளது. (1517)

தொடர்புகளுக்கு:
**077 773 0567**

## மாவிட்டபுரம் காணி விற்பனைக்கு

வீமன்காமம் அருகில் 36 பரப்பு, 20 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு
1 பரப்பு - 12 இலட்சம்
தொடர்புகளுக்கு :- விமல் (1517)

**0777348766**

## விற்பனைக்கு உண்டு

Toyota CHR GT (CBG xxxx) (2018) வாகனம் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. (1515)

தொடர்பு:
**076 693 2227**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- ☞ A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2 வது காணி)
- ☞ 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ☞ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ☞ நன்னீர் ஊற்றுச் சூழல், கட்டுக் கிணறு உள்ளது.
- ☞ ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- ☞ தரகர் தேவையில்லை.
- ☞ பார்வையிடும் நேரம் (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1513)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389**
**077 986 5457**

# மரண அறிவித்தல்

மலர்வு
23 - 02 - 1931



உதிர்வு
20 - 07 - 2024

## திருமதி தம்பிஜயா இராசாத்தி

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. இராசாத்தி தம்பிஜயா 20.07.2024 காலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி - சின்னம்மா தம்பதியினரின் இளைய புதல்வியும் முதலித்தம்பி தம்பிஜயாவின் மனைவியும் வள்ளியம்மை, சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியும் மற்றும் சத்தியதேவி, சிவகுமாரன், மனோகரி, சோபிதா, கமலாசினி, பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராமச்சந்திரா, ஜெயகுமாரி, பாஸ்கரன், தேவபாலன், இராஜமனோகரன், கார்த்திகா ஆகியோரின் மாமியாரும் கீர்த்தனன், திபிகா, கஜனன், துஷ்யந்தி, தர்சன்,ரமேக்கா, சிவலவன், அபிநயா, ஹரிகேஷ், பிரசாந்தி, பிரியங்கா, பிரதாயினி, பிரசாயினி, பிரணவி, சுகசிந்தவி, அக்ஷயன், சாஸ்வதாயி ஆகியோரின் பேர்த்தியும் நிஷான், டினோஜன், ரக்ஷான், பிரகதி, சப்தகி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (21.07.2024) மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.30 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அளவோடை வீதி,
இணுவில் மேற்கு. (C-830)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
CELEBRATING 25 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION
Pearson Assured | OXFORD BROOKES UNIVERSITY

JULY INTAKE
பதிவுகள் ஆரம்பம்!
Closing on July 31

25 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும்,சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள் !

BTEC HND
APPLIED SCIENCES
Leading to BSc (Hons)

- உயர்கல்வியை UK, Canada, Australia, Newzealand, Ireland நாடுகளில் தொடரும் சந்தர்ப்பம்.
- இலகு தவணைக் கட்டணம்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.

077 684 6261

(C-827)

021 221 9910 "Building Careers Transforming Lives" NO 16, Point Pedro Road, Jaffna www.bcas.lk



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
CELEBRATING 25 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION
Pearson Assured | BRITISH COUNCIL IELTS

Explore the journey to
Successful Pathway at School of Languages

- Diploma in English (6months)
  - Academic Reading
  - Academic Writing
  - Advance Speaking
  - Listening
- IELTS
  - Academic or General
  - Mock Exams
  - IELTS Registration
- PTE

Weekdays / Weekend Classes

For More Information
077 684 6261

(C-827)

021 221 9910 "Building Careers Transforming Lives" NO 16, Point Pedro Road, Jaffna www.bcas.lk



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாண்ட்யாவின் எதிர்காலம் நழுவிய கப்டன் வாய்ப்பு




“ரி-20” உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியன் ஆனது. பைனலில் தென்னாபிரிக்கா வெற்றிக்கு (30 பந்து 30 ரன்) அருகில் இருந்தது. அப்போது பந்து வீசிய துணைக் கப்டன் ஹர்திக் பாண்ட்யா, கிளாசனை அவுட்டாக்கி, இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு திருப்பினார்.

பின் கப்டன் ரோகித் சர்மா ஓய்வு பெற்ற நிலையில், இந்திய அணிக்கு தலைமை ஏற்க தயாராக இருந்தார். ஆனால் புதிய பயிற்சியாளர் காம்பிர் “அட்வைசில்” சூர்யகுமார் “ரி-20” அணிக்கு கப்டன் ஆனார். இதனால் விரக்தியில் உள்ளார் பாண்ட்யா.

கடந்த 2022இல் ரோகித்திடம் இருந்த இந்திய “ரி-20” கப்டன் பதவி, பாண்ட்யாவுக்கு வழங்கப்பட்டது. “இனி இந்தியா எதிர்காலம் இவர் தான்” என நினைத்த ஐ.பி.எல்., மும்பை அணி, நிர்வாகம், ரோகித்தை நீக்கவிட்டு பாண்ட்யாவை கப்டனாக நியமித்தது. ரசிகர்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஐ.பி.எல்., தொடரில் மும்பை கடைசி இடம்பிடித்தது.

தற்போது “ரி-20” உலகக்கிண்ணத்தை வென்று தந்த ரோகித், மும்பை அணி தனது கப்டன் பதவியை பறித்தது தவறு என நிரூபித்தார். இதனால் அடுத்த ஆண்டு வீரர்கள் ஏலம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் ரோகித் விலக விரும்பினால் மும்பை என்ன செய்யும், அல்லது அவரை தக்கவைக்குமா, பாண்ட்யாவுக்கு எவ்வளவு தொகை தரும், இந்திய அணி புதிய கப்டன் சூர்யகுமாருக்கு எவ்வளவு விலை கொடுத்து தக்கவைக்கும் என பல புதிர்கள் ஏற்பட்டுள்ளன.

மறுபக்கம் வேகப்பந்து வீச்சாளர் பும்ராவும், மும்பை அணி கப்டன் ஆக விரும்பலாம். எப்படி இருப்பினும், காம்பிரின் வருகையால் இந்தியா, ஐ.பி.எல் தொடரில் பாண்ட்யா எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

அடுத்த ஆண்டு சம்பியன்ஸ் டிராபி தொடரில் (50 ஓவர்) பாண்ட்யா பங்கேற்க விரும்பினால், வரும் விஜய் ஹசாரே தொடரில் திறமை நிரூபித்தாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பயிற்சியாளர் காம்பிர் வருகை இந்திய அணியில் புயலை கிளப்பியுள்ளது எனலாம். சூர்ய குமார் கப்டன் ஆனது, ஜிம்பாப்வே மண்ணில் சதம் விளாசிய அபிஷேக் சர்மா, சகால், ஜடேஜா புறக் கணிப்பு, “ரி-20” உலக அணியில் “ரிசர்வ்” பவுலராக இருந்த, ஜிம்பாப்வே தொடரில் அசத்திய அவேஷ் கான், முகேஷ் குமாருக்கு கல்தா, கோல்கட்டா அணியின் ஹர்ஷித் ராணாவை ஒருநாள் அணியில் சேர்த்தது என, சிறப்பாக செயற்பட்ட வீரர்கள் கழற்றி விடப்பட்டனர்.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டது ருதுராஜ் தான். 2023 ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு தங்கம் வென்று தந்தார். ஜிம்பாப்வே தொடரில் இவர் தான் கப்டனாக இருப்பார் என நம்பப்பட்டது. மாறாக சுப்மன் கில் தலைமை ஏற்றார். “ரி-20”, ஒருநாள் என இரு அணியிலும் கழற்றி விடப்பட்டுள்ளார்.

கடைசி 7 “ரி-20” இன்னிங்சில் ருதுராஜ் 356 ரன் (சராசரி 39.56 ரன்) எடுத்துள்ளார். ஜெய்ஸ்வால் (263, 37.82), சுப்மன் (201, 29.70), சூர்யகுமார் (197, 43.33), பாண்ட்யா (158, 26.64) அடுத்தடுத்து உள்ளனர். இருப்பினும் ருதுராஜ் நீக்கப்பட்டது பரிதாபம் தான். (நி)

# இலங்கை அணியை தேர்ந்தெடுக்க பயன்படுத்தப்படும் AI தொழில்நுட்பம்



சர்வதேச போட்டித் தொடர்களில் பங்கேற்கும் இலங்கை அணியின் பெயர் பட்டியலை தயாரிப்பதில் அணியின் தேர்வுக்குழு பல்வேறு விமர்சனங்களை எதிர்கொள்கிறது.

இலங்கை கிரிக்கெட் ரசிகர்களால் குறித்த இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இருந்த போதிலும் எதிர்காலத்தில் அணியை தெரிவு செய்வதற்கு AI தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என கிரிக்கெட் வர்ணனையாளர் பந்துல சமன் வதுரேகம தெரிவித்துள்ளார்.

மேலும் “இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் கிரிக்கெட் விளையாட்டில் AI தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை இணைக்க உழைத்து வருகின்றனர்.

AI தொழில்நுட்பத்தின் கீழ், அணியையும் அணித் தலைவரையும் தேர்ந்தெடுக்க முடியும்.” என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன்

(ஓய்வுநிலை நவீல்ட் பாடசாலை, கைதடி - ஆசிரியை)



மட்டக்களப்பு நாவற்குடா வினைப் பிறப்பிடமாகவும் இல. 20, றக்காலேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றொஸ்லின் மேரி எலிசபெத் சத்தியேந்திரன் அவர்கள் நேற்று (20.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. ஜெ. சத்தியேந்திரன் (ஓய்வுநிலை உதவிப் பிராந்திய முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கை சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அசரியா - ஹெப்சிபா தம்பதிகளின் அன்பு மகளும் ஜெகதீசசிங்கம் - ருக்குமணி அவர்களின் அன்பு மருமகளும் அமரர் ஹில்டா அசரியா, திருமதி பியூலா றொபின்சன், திரு.அம்புறூஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு.ஜெ.பவானந்தசிவம், திரு.ஜெ.புவனேந்திரன், திருமதி பா.மனோரஞ்சிதம், திரு.றொபின்சன் அவர்களின் மைத்துனியும் திருமதி கா.ஜெகரூபி, திருமதி Dr.பி.ஜெகமாலினி, திருமதி தீ.ஜெகசுதா, திருமதி ஜெ.ஜெகவனிதா, திருமதி Dr.தேவரஞ்சனா, திருமதி க.யுஷந்தி, திரு.எட்வின், திருமதி E.டிலக்சினி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதி ஆராதனை நாளை திங்கட்கிழமை (22.07.2024) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சென். ஜோன்ஸ் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, றக்கா லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (C-832)

தகவல்: திரு.ஜெ.சத்தியேந்திரன் (கணவர்)
தொ.பே: 077 505 6263


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிப ஆண் ஒருவரைப் பராமரிப்பதற்கு, வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணியாளர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.(177)

078 731 1049
070 467 4672


## வீடு விற்பனைக்கு

யாழ். வேம்படி மகளீர் கல்லூரி முன் றோட்டில் வீடு விற்பனைக்குண்டு.

077 160 6036 (1521)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆவது திருத்தச் சட்டம்
# தேர்தலை குழப்பும் நடவடிக்கையா?
## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்கள் வெளிவர உள்ள நிலையில் 22 ஆவது திருத்த சட்டம் தேவையா? இது தேர்தலை குழப்புவதற்கான ஏற்பாடா? எனும் சந்தேகம் தற்போது பலரிடம் ஏற்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

22ஆம் திருத்த சட்டத்தை கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. இந்த சட்டத்தால் எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நடக்க இருக்கும் போது இந்த திருத்தம் தேவையா? எனும் கேள்வி எழுகிறது. இப்போது ஏன் அவசரப்பட்டு மாற்ற முனைகிறார்கள் எனில் தேர்தலை குழப்பும் நடவடிக்கையாக இருக்கும் என சந்தேகிக்கிறோம்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், நாடு வங்குரோத்துக்கு போய் விட்டது. என தேர்தலை கால வரையின்றி ஒத்திவைத்துள்ளனர். தேர்தல் இரத்து செய்யப்படவில்லை.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்ற நிலை காணப்படுகிற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கு என 5 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதற்காகவே, அவ்வாறு அபிவிருத்திக்கு என கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட கூடியவர்கள் யாழ்ப்பாணம் நோக்கிவந்து 13 ஆம் திருத்தம் தருவோம் என்கின்றனர்.

ஆனால் மாகாண சபை தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருப்பது பற்றிக் கதைக்கவே இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-33)



கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியின் 2024 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளி.பளை மத்திய கல்லூரி அதிபர் கு.ரவீந்திரா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. சி.சிறி சற்குணராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(படம்-வசந்தரூபன்)



அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீவட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் நேற்று இடம்பெற்ற இரதோற்சவம். (படம்-சிவசாந்தன்)


**வாடகைக்கு**

நாவலர் வீதியில் வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு. தனிஅறை, குளியல் அறை, சமையலறை, திறந்த விறாந்தை பெண்களிற்கு மட்டும் வழங்கப்படும்.

வாடகை: ரூபாய் 14000/-

T.P -071 031 6312 (அ-2344)

**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

**மணமகள் தேவை**

1985. இந்து. பூராடம். Doctor. பருத்தித்துறை. மணமகன் பதிவு இல: 8586. தரகர் கூலி இல்லை.

பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை

அழையுங்கள்-076 664 9401 (அ-2343)

**மணமகள் தேவை**

1986.இந்து.உத்தராடம். Doctor. வட்டுக்கோட்டை. மணமகன் பதிவு இல: 9173. தரகர் கூலி இல்லை.

பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை

அழையுங்கள்-076 664 9401 (அ-2343)

**மணமகன் தேவை**

1994,இந்து.பரணி. Doctor. வவுனியா. மணமகள் பதிவு இல: 10282. தரகர் கூலி இல்லை.

பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை.

அழையுங்கள்-076 664 9401 (அ-2343)

**மணமகன் தேவை**

1990.இந்து.அவிட்டம்.TEACHER. மல்லாகம். மணமகள் பதிவு இல: 10574. தரகர் கூலி இல்லை.

பதிவுக் கட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை.

அழையுங்கள்-076 664 9401 (அ-2343)


# இராசிபலன்

21.07.2024
ஆடி 05, ஞாயிற்றுக்கிழமை
பூரணை பிற்பகல் 4.52 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 2.08 மணிவரை

சுபநேரம்- 9.01-10.31 மணிவரை
இராகுகாலம்-4.31-6.01 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்
ரோகிணி.

வளவன்

**மேஷம்**
புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்**
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம்.

**துலாம்**
செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், ஆற்றல்மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**ரிஷபம்**
தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தேக நலன் சீராகும்.

**சிம்மம்**
பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்**
போசன சுகமுண்டு, வளர்ச்சி கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள்.

**கன்னி**
நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு**
எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.


**மீனம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உண்மையை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நல்லது

## விக்கினேஸ்வரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே.


இந்த ஜனாதிபதித் தேர்தலை பொறுத்த வரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற முனைப்பு காட்டுவார்கள்.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும்.

ஏற்கனவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. அந்நிலையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போனால் நாடும் மிக மோசமான பொருளாதார பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

அத்துடன் தேர்தலுக்காக பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும்.

எனவே அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு வருட காலத்திற்கு ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-33)



யாழ்ப்பாணம் - கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் (ஐயனார்) ஆலய தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)



சிவசிதம்பரத்தின் 101 ஆவது அகவை தின நினைவு நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணிக்கு நெல்லியடியில் அமைந் துள்ள அன்னாரின் சிலை வளாகத்தில் கரவெட்டி அபி விருத்தி ஒன்றியம் ஏற் பாட்டில் இடம்பெற்றது.

அரசியல் பிரமுகர்கள், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய நிர்வாகிகள், பொது மக்கள், மாகாண சபை உறுப்பினர் சுகிதன் ஆகியோர் மலர் தூவி அஞ் சலிசெலுத்தினர். (படம்:மகாலிங்கம்)



லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மாணவர்களுக்கு அண்மையில் தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி பயிற்சி நெறியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றினர். (படம்:சுபேசன்)

# "சுடர் ஒளி" சிறார்களின் வேடந்தாங்கல் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி -மீசாலை வடக்கு "சுடர் ஒளி" முன்பள்ளிச் சிறார்களின் வேடந்தாங்கல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம் பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் செல்வி சிவதாஸ் மிதிலா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்விற்கு விருந்தினர்களாக தமிழ் இணையக் கல்விக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் சாவகச்சேரி நீதிவான் நீதி மன்ற சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தருமான க.ரஜனிகாந்தன், முன்பள்ளியின் பழைய மாணவியான திருமதி. தாட்சாயினி தனுசன் மற்றும் முன்பள்ளியின் உப தலைவர் ந.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (நி-30)

# பழநி வேல் பவனி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய வேல் பவனி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச.பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/போகட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும் சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார உத்தியோகத்தர் செல்வி கு.குணசீதா மற்றும் சாவகச்சேரி நகர் கிராம உத்தியோகத்தர் கு.பரமானந்தமும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

மேற்படி பவனியானது ஆலயத்தில் இருந்து டச் வீதி, இராமலிங்கம் வீதி, கண்டி வீதி, தபாற் கந்தோர் வீதி, செருக்கல் பிள்ளையார் ஒழுங்கை ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த சு.துரைராஜசிங்கம் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தரான இவர் இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் உபதலைவராவார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 250 | 150 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 250 | 250 | 240 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 400-500 | 450 |
| தக்காளி | 420 | 400 | 450 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 120-140 | 200 |
| கோவா | 350 | 420 | 400 | 300 | 350 |
| கரட் | 400 | 500 | 480 | 280 | 500 |
| பூசணி | 180 | 250 | 230 | 150 | 280 |
| புடோல் | 180 | 120 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | 160-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 250-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 260 | 260 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 300-350 | 450 |
| லீக்ஸ் | 520 | 450 | 550 | 300 | 600 |
| பீற்றூட் | 600 | 400 | 400 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 850 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 600 | 450 | 450 | 250-350 | 450 |
| போஞ்சி | 600 | 500 | 650 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 250 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 60 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 400-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 90 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 600 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 200 | 350 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 451
Viber 076 636 3378



# போர்க்குற்ற மீறல்கள் நடைபெறவில்லையா?

இராமாயணத்தில் வாலி வதம் இன்று வரை பேசுபொருளாகவே இருந்து வருகிறது.

ஏகபத்தினி விரதத்தை தன் வாழ்நாள் முழுவதும் மூச்சாகக் கொண்ட உத்தம வீரன் இராமன். இராமனின் பலத்திற்கு முன் இந்த உலகில் எவரும் இருந்திலர்.

அப்படிப்பட்ட மகா வீரன் ஏன் வாலியை மறைந்திருந்து அம்பு எய்து வதம் செய்ய வேண்டும். இராமர் போர்க்குற்றம் புரிந்திருக்கிறார் என இன்றுவரை வாதிடுபவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

வாலி இந்திரனிடம் பெற்ற வரத்தினூடாக வாலியுடன் யார் போர் புரிந்தாலும் எதிரியின் பாதிப் பலம் வாலிக்கு வந்து சேர்ந்து விடும்.

அதனால் தான் வாலியை இராமன் மறைந்திருந்து வதம் செய்ததார் எனக் கூறுபவர்களும் உளர்.

அல்ல, வாலியின் எதிரே இராமர் தென்படுவாராக இருந்தால் இராமனின் பலத்தில் பாதி வாலியிடம் சேர்ந்து விடும் என பலரும் நினைக்கலாம்.

அவ்வாறு இராமன் வாலியின் எதிரே வந்திருந்தால் இந்திரனின் வரம் இராமபிரானிடம் பொய்த்துப் போயிருக்கும். இந்திரனின் வரத்தை காக்கவே இராமன் வாலியை மறைந்திருந்து வதம் செய்தார் என இராமாயணத்தில் கூறப்படுகிறது. இதிகாச புராண காலங்களிலேயே போர் மரபுகள் இயற்றப்பட்டு விட்டன.

**“ இதிகாச புராண காலங்களிலிருந்து நிராயுத பாணிகள் மீதோ, அப்பாவிப் பொதுமக்கள் மீதோ போர் தொடுக்கக்கூடாது எனும் ஒழுக்கநெறி பின்பற்றப்பட்டு வருகிறது. இதை இவ்விடயத்தில் புரிந்து கொண்டு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும். இதுவே தர்மம்.**

போர்க்களத்தில் நிராயுதபாணியாய் நின்ற இராவனனை “இன்று போய் போர்க்கு நீ நாளை வா” என இராமபிரான் கூறுவதை போர்க்களத்தில் நிராயுதபாணியாய் நிற்பவர் மீது போர் தொடுக்கக் கூடாது என்ற உன்னத தத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

நிலை இவ்வாறு இருக்கையில் வன்னிப் பெருநிலப் பரப்பில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் நடந்த கொடும் போரில் அப்பாவிப் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்.



ஒரு சிறிய பிரதேசத்தில் இலட்சக் கணக்கான பொதுமக்கள் மிகவும் நெருக்கமாக இருந்த வேளை அவர்கள் மீது கண்மூடித் தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் சுமார் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர். இது உலக வரலாற்றில் பாரிய போர்க்குற்றமீறல்.

கண்மூடித்தனமாக அப்பாவிப் பொது மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களிற்கான ஆதாரங்கள் பல வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன. அத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இன அழிப்பை சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட கானொளி இலங்கை அரசின் முகத்திரையைக் கிழித்து காட்டியதாய் அமைந்திருந்தது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த போரில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான நீதி நிச்சயம் கிடைக்க வேண்டும்.

இந்த நீதியை இலங்கை ஆட்சியாளர்கள் தருவார்கள் என்று எவரும் கனவு கண்டு விடக்கூடாது. போர் நிறைவுற்று 15 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆயினும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய நீதி இன்னமும் அநீதியான நிலையிலேயே இருக்கிறது.

தவிர தமிழர் பிரதேசங்களில் பௌத்தத்தை திணிப்பதிலும் அவர்கள் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதிலும் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். இவ்வாறானவர்களிடமிருந்து தமிழினத்துக்கு நீதி கிடைக்கும் என்று எப்படி நம்ப முடியும்.

இந்த நிலையிலேயே அண்மையில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இறுதி யுத்தம் தொடர்பில் பேசியிருந்தார்.

அதாவது, இலங்கை இராணுவத்தின் மீது தமிழ் மக்களுக்கு எதுவித கோபமோ வெறுப்போ இல்லை. அவ்வாறு வெறுப் புணர்வு இருக்குமாக இருந்தால் அவர்கள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு அதிக வாக்குகளை அளித்திருக்கமாட்டார்கள் எனக் கூறினார்.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் போர்க்குற்ற மீறல்கள் எதுவும் நடக்கவில்லை. இறுதிப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் இறந்ததாகக் கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்து.

அப்படி வன்னிப்பெருநிலப்பரப்பில் நடந்திருந்தால் அங்கு பார்க்கும் இடமெல் லாம் மனிதப் புதைகுழிகளே இருந்திருக்கும்.

போரில் நாம் கண்ணியமாக நடந்து கொண்டோம். கனரக ஆயுதங்கள் எவற்றையும் பயன்படுத்தவில்லை. அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் மிகச் சொற்ப நாட்களில் போர் முடிவுக்கு வந்திருக்கும் எனவும் கூறியிருக்கிறார்.

இங்குதான் சரத் பொன்சேகா ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது 2009 ஆம் ஆண்டு போர் நிறைவு பெற்றதன் பின்னர் தமிழ் மக்கள் சொல் லணா வலிகளைச் சுமந்து, வடுக்களுடன் வாழ்ந்த நேரத்திலேயே 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடை பெற்றது.

அந்த நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவில் இருந்த வெறுப்பைக் காட்ட வேண்டிய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்குகளை வாரி வழங்கியிருந்தார்கள் என்பதை தாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தவிர போர்க்குற்ற மீறல்கள் நடந்ததாகவும் போரில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாயும் சர்வதேச ரீதியில் பலமான ஆதாரங்கள் இருக்கும் நிலையில், இவை மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் எனக் கூறுவதற்குள் இருக்கும் உண்மை மறைப்பை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆக இதிகாச புராண காலங்களிலிருந்து நிராயுதபாணிகளின் மீதோ, அப்பாவிப் பொதுமக்கள் மீதோ போர் தொடுக்கக் கூடாது எனும் ஒழுக்கநெறி பின்பற்றப்பட்டு வருகிறது.

இதை இவ்விடத்தில் புரிந்து கொண்டு தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றத்தர வேண்டும். அதுவே தர்மம்.

அபிமன்யு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமில்... டுமில்.. அனுதாப அலையில் ட்ரம்ப்

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் பல நேரங்களில் பெயர்களை மாற்றிச் சொல்லி உளறிவருகிறார் பைடன். குறிப்பாக ஒபாமாவை ட்ரம்ப் என்றும் ட்ரம்ப்பை ஒபாமா என்றும் சிலமுறை மாற்றிச் சொல்லி மாட்டிக் கொண்டிருக்கிறார்.

உளறல்களின் உச்சமாக ஒரு முறை துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை, ஹஃபர்ஸ்ட் லேடி' (ஜனாதிபதியின் மனைவி) எனக் குறிப்பிட்டுப் பேசி, பெரும் சர்ச்சையில் சிக்கிக் கொண்டார் பைடன். கடந்த ஜூன் 27ஆம் திகதி குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப்புடன் நேருக்கு நேர் செய்த விவாதத்தில் பல்வேறு விடயங்களில் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினார் ஜனாதிபதி பைடன். மேலும், விவாதத்தின் போது அவர் கூறிய பதில்கள் பலவும் நடைமுறைக்குச் சம்பந்தமேயில்லாமல் இருந்ததும் கடும் விமர்சனத்துக்குள்ளானது.

சர்வதேச அரசியல் பார்வையாளர்கள், "81 வயதாகும் பைடன்தான் அமெரிக்காவின் மிகவும் வயதானஜனாதிபதி. 78 வயதாகும் ட்ரம்ப் எதிர்வரும் தேர்தலில் வென்றால், அவர்தான் அமெரிக்காவின் இரண்டாவது வயதான ஜனாதிபதியாக இருப்பார். இதனால், இரண்டு கட்சிகளிலுமே "இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும்' என்ற குரல்கள் ஒலிக்கின்றன.



அதிலும் நிதானத்தை இழந்து மறதியால் அவதிப்படும் பைடன்மீது அமெரிக்காவின் பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றனர். சில வழக்குகளில் சிக்கியிருக்கும் ட்ரம்ப், ஜனாதிபதியாக இருந்தபோது சில மோசமான முடிவுகளை எடுத்திருந்தார். இருந்தும், பைடனுக்கு ட்ரம்ப்பே மேல்' என்ற முடிவுக்கு வந்துவிட்டனர் அமெரிக்க மக்கள்.

பிரசாரங்களில் ட்ரம்ப்புக்கு எதிராக கமலா அதிரடி காட்டுவதால் அவரே சரியான ஜனாதிபதி வேட்பாளராக இருப்பார் என ஜனநாயகக் கட்சியினர் நம்புகின்றனர். ஆனால் பைடனோ, நான் தொடங்கிய திட்டங்கள், அடுத்த ஆட்சியில்தான் முழுமை பெறும். அதனால், போட்டியிலிருந்து விலகவே மாட்டேன்' என விடாப்பிடியாக இருக்கிறார்.

ஆகஸ்ட் 19 முதல் 22 வரை ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற விருக்கிறது. இதில்தான் ஜனாதிபதி வேட்பாளரை அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுப்பார்கள். அங்கு, கட்சியினர் நினைத்தால் ஜனாதிபதி வேட்பாளரை மாற்ற முடியும். ஆனால் அது அவ்வளவு எளிதில் நடக்காது. எனவே பைடனே மனது வைத்து விலகினால்தான் உண்டு" என்கின்றனர். இதற்கிடையே 14ஆம் திகதி நடந்த குடியரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், காதில் குண்டு உரசியதால் நூலிழையில் உயிர் தப்பியிருக்கிறார் ட்ரம்ப்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டால், ட்ரம்ப்புக்கு ஆதரவாக அனுதாப அலை வீசுவது அவருக்கு ப்ளஸ். அதேநேரத்தில் பாதுகாப்புக் குறைபாடு, அமெரிக்காவில் அதிகரித்துவரும் துப்பாக்கிக் கலாசாரம் ஆகியவை பைடனின் நிர்வாகத்திறனை மீண்டும் கேள்விக்குள்ளாக்கியிருப்பது,

ஜனநாயகக் கட்சிக்குப் பெரிய மைனஸ்!

# சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே...



இதுக்கெல்லாமா சட்டம் என்று கேட்டவுடனே நமக்கு குபீர் சிரிப்புத்தான் வருகிறது. ஆனால், இன்றைய நவீன வாழ்க்கை எந்தளவு இறுக்கமாகவும் மகிழ்ச்சி இல்லாமலும் வறட்சியாக நகர்கிறது என்பதற்கான உதாரணமாக இதைப் புரிந்துகொள்ளலாம்.

ஜப்பானின் வடக்குப் பகுதியில் உள்ளது யமகட்டா மாகாணம். இங்கு ஆட்சி செய்யும் லிபரல் டெமாக்ரட்டிக் பார்ட்டிதான் இந்தப் புதிய சட்டத்தை இயற்றியுள்ளது.

'தினமும் சிரிப்பது உடல்நலம், மனநலம் இரண்டையும் மேம்படுத்தும். மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது' என இதுகுறித்து அரசு விளக்கமளித்துள்ளது. யமகட்டா பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை மேற்கொண்ட ஆராய்ச்சியின் எதிரொலியாகவே இந்த முன்னெடுப்பு நிகழ்ந்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டில் சுமார் 17,152 பேரிடம் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 40 வயதுடையோர் இந்த ஆய்வில் பங்கேற்றனர். குறைவாக சிரிப்பவர்கள் அல்லது சிரிக்காமலேயே இருக்கும் சீரியஸ் ஆசாமிகளுக்கு இதயம் தொடர்பான பிரச்சினைகள் அதிகம் வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

சிரிப்பில்லாத வாழ்க்கை உயிரிழப்பு போன்ற அபாயங்களுடனும் தொடர்பு கொண்டது என ஆய்வின் முடிவில் தெரிய வந்தது. இந்த ஆய்வுக்கட்டுரை Journal of Epidemiology இதழிலும் வெளியானது.

இந்த ஆய்வின் அடிப்படையிலேயே நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நலன் கருதி புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

'சிரிப்பது வாழ்க்கையை அனுபவிப்பதற்கும் நேர்மறையான எண்ணங்களுக்கும் செயற்றிறனை வளர்ப்பதற்கும், அமைதி, நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, மனசாட்சியுடன் வாழ்வதற்கும் உதவி செய்யும்' என்றும் கூறுகிறது புதிய சட்டம்.

இந்தச் சிரிப்புச் சட்டம் பற்றி பொதுமக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்க, ஒவ்வொரு மாதத்தின் 8ஆம் நாளானது சிரிப்பின் மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் தினமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யமகட்டா அரசின் இந்தச் சட்டமானது எதிர்க்கட்சியினர் மற்றும் சில சமூக ஆர்வலர்களால் கடும் விமர்சனத்துக்கும், எதிர்ப்புக்கும் ஆளாகியிருக்கிறது. 'சிரிப்பதும், சிரிக்காமல் இருப்பதும் ஒரு மனிதனின் தனிப்பட்ட உரிமை. இந்தச் சட்டம் தனி மனிதனின் அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது. எல்லோருக்கும் சிரிக்கும் சூழ்நிலை இருக்காது. சிலர் தனிப்பட்ட வாழ்வில் ஏதேனும் துக்க மனநிலையில் இருப்பார்கள். வேலைப் பளு இருக்கும். உடல்நிலை சரியில்லாமல் இருப்பார்கள். அவர்களிடம் எல்லாம் சென்று ஏன் சிரிக்கவில்லை என்று கேட்க முடியாது' என்று கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளனர்.


ஜப்பானில் அமுலுக்கு வந்த இந்தச் சட்டம் விநோதமாக இருந்தாலும் எதிர்ப்பினை சந்தித்தாலும் பொதுமக்களிடையே சிரிப்பு பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் என்பதால் இது வரவேற்க வேண்டியதே. இதைத்தான் 'வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்று எந்த ஆராய்ச்சியும் செய்யாமலேயே நம் ஊரில் பழமொழியாக முன்பே சொல்லி வைத்தார்கள்!

ஜப்பானின் சில விநோதமான சட்டங்கள்...

ஜப்பானில் இதுபோன்ற விநோதமான சட்டம் அமுலுக்கு வருவது இது முதன்முறையல்ல. ஏற்கெனவே சில சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

- ஜப்பானின் ரூபாய் நோட்டை சேதப்படுத்துவது ஓர் ஆண்டு வரை சிறைத்தண்டை அளிப்பதற்கேற்ற தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.
- வீட்டிலுள்ள குப்பையை அதற்குரிய நாளில்தான் வெளியில் எடுத்து வர வேண்டும். இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படும்.
- ஒரு சதவிகிதத்துக்கும் மேல் அற்ககோல் கொண்ட மதுபானத்தை விற்பனை செய்வது சட்ட விரோதம். மீறினால் அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படும்.
- கடந்த 1948ஆம் ஆண்டு முதல் இரவுவிடுதிகளிலும், பார்களிலும் நடனமாடுவது குற்றமாகவே இருந்தது. நீண்ட சட்டப்போராட்டத்துக்குப் பிறகு 2014ஆம் ஆண்டுதான் அந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது.
- டாட்டூ குத்துகிறவர்கள் மாஃபியா கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று அரசு கருதியது. இதனால் வெளியில் தெரியும் வகையில் டாட்டூ போட்டுக் கொண்டு வருகிறவர்களுக்குப் பொது இடங்களில் அனுமதி மறுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டொனால்ட் ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு அவரது வெற்றிக்கு வழி வகுக்குமா?

**சுதன் — குப்பிளான்**

**2.25 கோடி மக்கள் வாழும் நாட்டில் 151 அமைச்சர்களாம். அப்படியென்றால் நாடு உருப்படுமா?**

நாட்டின் மக்கள் தொகைக்கேற்ப அமைச்சுப் பதவி இருந்தால் அதனால் வரக்கூடிய சேவையும் சிறப்பாக இருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

ஆனால் எம் மண்ணில் முகம் பார்த்து, பழகிய பழக்கம் பார்த்து செய்த உதவி பார்த்து அமைச்சுப் பதவியைப் பகிர்ந்தால் அதனால் மக்கள் இன்றும் துன்பப்படவே செய்வார்கள்.

இந்நிலை மாறவேண்டும்.

அதற்கு ஆட்சியாளர்கள் மனம் வைத்தாலே ஒழிய வேறு எதுவும் செய்து விட முடியாது.

**இளங்கோ — மானிப்பாய்**

**உண்மையையும் நேர்மையையும் காலால் மிதித்து ஊழல் ஆதிக்கம் கோலோச்சு வது எப்போதும் மாறாதா வியாசரே?**

உண்மை என்பது ஆலம் விதை போல எப்பேற்பட்ட வெம்மையையும் புயல் மழையையும் எதிர்த்து முளைத்து விருட்சமாக வல்லது.

ஆனால் அதற்கான காலம் சற்று அதிக மானாலும் உண்மை வெளிவந்தே தீரும். நேர்மை வெற்றி பெற்றே தீரும்.

இது பலருக்குப் புரிவதே இல்லை.

இரண்டாம் உலக யுத்தத்தில் கிரோசிமா , நாகசாயி நகரங்கள் மீது அணுகுண்டை வீசி பேரழிவை ஏற்படுத்திய விமானிகள் கொடிய புற்று நோயால் அவதியுற்று இறந்து போனார்கள்.

இறுதிக் காலத்தில் குறித்த நிகழ்விற்குப் பின் தமது மன நிலை மிக மோசமானதாக இருந்ததாகவும் அது தம்மை நரகத்தின் வாழ்வை புரிய வைத்தாகவும் கூறியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**விஜயகுமார் — முகமாலை**

**நாட்டில் தேர்தல் நடத்தப்படும் சாத்தியப்பாடுகள் ஏதும் இருக்கிறதா வியாசரே?**

மழை வரும் முன் கருமுகில் கூட்டம் சூழும், காற்றுப் பலமாக அடிக்கும் , மரங்களில் உள்ள இலைகள் உதிர்ந்து விழும், காலநிலை குளிராக மாறும். இவ்வாறான மாற்றங்கள் நடக்குமல்லவா?

அது போலத்தான் தேர்தல் வரப் போகிறது என்றால் அரசியல்வாதிகளின் விஜயங்கள் சுறுசுறுப்பாகும்.

அவர்களின் உதவித் திட்டங்கள் சூடு பிடிக்கும், பேச்சுக்களில் அனல் பறக்கும், அடுத்தவர்கள் மீது சேறு பூசும் செயல் திறம்பட நடக்கும்.

இப்போது இவை அனைத்தும் நடக்கிறது அல்லவா. அதனால் தேர்தல் வருவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.தேர்தல் மழையில் நனைய நீங்கள் தயாரா?




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**மரியாதைக்குரிய வியாசர் அவர்களே வேலையில்லாத தமிழ் இளைஞர்களுக்கு என்ன தீர்வு உண்டு?**

செய்தால் அரச வேலை தான் செய்வேன் என்று அரச வேலைக்காக எம் இளைஞர்கள் காத்திருப்பார்களாயின் அது அவர்களின் அறுபதாவது வயதில் தான் கிடைக்கும்.

அரச வேலை கிடைக்கும் போது கிடைக்கட்டும்.

அதுவரை சொந்தமாக, சுயமாய், தனியார் துறைகளில், அரச சார்பற்ற நிறுவனங்களில், விவசாயம், கால்நடை வளர்ப்பு என பல் வேறு துறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் அது அவர்களின் அரச வேலைக்கு செல்லும் எண்ணத்தை தவிடு பொடியாக்கி விடும்.

அரச வேலை என்றால் ஒய்வூதியம் பெறலாம்.

கடைசிக் காலத்தில் அது எமக்கு உதவி புரியும் என்ற எண்ணத்தைத் தவிர்த்து தனியார், சுயதொழில் துறையிலும் ஓய்வூதியம் பெறும் திட்டங்களை வகுத்து செழிப்பாய் வாழலாம்.

இதற்கு எமது இளைஞரிடம் தேவை, அரச வேலைக்காய் காத்திருக்காத மனமாற்றம் ஒன்றே.




நாட்டில் தேர்தல் நடத்தப்படும் சாத்தியப்பாடுகள் ஏதும் இருக்கிறதா வியாசரே?

**விஜயதரன் — உரும்பிராய்**

**டொனால்ட் ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு அவரது வெற்றிக்கு வழி வகுக்குமா?**

டொனால்ட் ட்ரம்பின் கேலிக் கூத்துக்களை வெறுத்து ஜோ பைடனை விரும்பி ஏற்றனர் அமெரிக்க மக்கள்.

ஆனால் அவரால் அமெரிக்காவில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்த முடியவில்லை.

அடுத்த ஜனாதிபதியாக யார் வருவார் என்ற கருத்துக் கணிப்பில் ஜோ பைடனுக்கு 44 விகிதமும் டொனால்ட் ட்ரம்பிற்கு 49 விகிதமுமாக இருந்தது. தற்போது ட்ரம்ப் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். அந்த அனுதாப அலைகளை வைத்துப் பார்க்கும் போது. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் என்பது உறுதியாகி விட்டதை உணரமுடிகிறது.

**மதுவன் — மீசாலை**

**ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க சுயேட்சையாக போட்டியிடப் போகின்றாராமே?**

தாய்க் கட்சிக்கு வரும் படி ஐக்கிய மக்கள் சக்தியினரை அழைக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இல்லை முடியாது கட்சி மாறி நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களுடன் ஒரு போதும் இணைய மாட்டோம் எமது வழி தனி வழி என்கின்றார் சஜித்.

ரணில் விக்கிரமசிங்க பெரமுனவுடன் இருந்தால் அவருக்கு ஆதரவு கொடுக்க நாம் தயார் என்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் தேர்தலை சுயேட்சையாக எதிர் கொள்வார் என்கின்றனர் ஐ.தே.க வினர்.

எது எப்படி நடக்கப் போகிறது என புரியவேயில்லை.

ஆனால் ஏதோ பிரலயம் நடக்கப் போகிறது என்று மட்டும் புரிகிறது.

**அபிராம் — வதிரி**

**என் மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை. எதற்கு எடுத்தாலும் நொய்யு..நொய்யு.. என்கிறாளே?**

மனைவி: நீங்கள் இப்ப ரொம்ப மோசம் கல்யாணத்திற்கு முன்னாடி பார்க், பீச், கொட்டல் என்று எவ்வளவு இடத்திற்கு என்னைக் கூட்டிக் கொண்டு போவீங்க இப்ப அப்படி எதுவும் செய்யிறதே இல்லை.

கணவன்: எடி அசட்டுப் பொண்டாட்டி தேர்தலுக்குப் பின்னர் எவனாவது பிரச்சாரத்திற்குப் போவானா சொல்லு.

நீ வேற நொய்யு... நொய்யு என்னிட்டு இருக்க..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆலடி மாநாடு


சிவஸ்ரீ சுதர்சனக்குருக்கள்


பெரியார்
க.குமாரசுவாமி


கலாபூசணம்
கே.வி.குணசேகரம்


கலாபூசணம்
க.கதிரவேலு



## மணிக்கூடு திருத்தும் போது மோசடிகள் நடக்கின்றனவா?

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்ற எல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுதர்சனக் குருக்கள் இவ்வுலகை விட்டு நீத்துள்ளார்.

சிரேஷ்ட அந்தணச் சிவாச்சாரியரான அவர் பத்திரிகைகளில் சமயக் கட்டுரைகளை எழுதி மக்களை ஆன்மீக நெறியில் வழிப்படுத்தியவர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

இதைத் தொடர்ந்து எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம், சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட நல்லூர் பதியில் வாழ்ந்த பெரியார் க.குமாரசாமி அவர்கள் நம்மை விட்டு பிரிந்து விட்டார். ஒரு நல்ல மனிதர். சைவ வாழ்வு வாழ்ந்த நேர்மையாளர். அவரின் ஆத்மா சாந்தியடைவதற்காகவும்

இதேபோன்று அதிபராகவும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து ஓய்வு பெற்ற கோப்பாய் ஊரைச் சேர்ந்த கே.வி.குணசேகரம் அவர்கள் காலமாகிவிட்டார். பல நூல்களையும் சிறுவர்களுக்கான கதைகளையும் எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர். அன்னாரின் இளைப் பாற்றலுக்காவும்

உரும்பிராயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர் கணபதிப்பிள்ளை கதிரவேல் அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து துயரமடைகின்றோம்.

வலம்புரிப் பத்திரிகையின் இலட்சினையை வடிவமைத்துத் தந்த சிறந்த சித்திர ஓவியக் கலைஞரான அவரின் மறைவு பேரிழப்பாகும். இவரின் ஆத்ம சாந்திக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** அதுசரி, எப்பவும் நேரத்தோட ஆலடிக்கு வார விதானையாரை இன்னமும் காணவில்லை என்ன சங்கதி?

இவ்வாறு கங்காணியார் கேட்க அந்நேரம் பார்த்து ஆலடிக்கு விதானையார் வந்து சேர்ந்தார்.

இந்தா விதானையார் வந்திட்டார். அவருக்கு ஆயுள் நூறு. கங்காணி கூறி முடிப்பதற்குள் விதானையார் ஆலடியில் அமர்ந்து கொண்டார்.

விதானையாரின் முகம் சோர்ந்து இருப்பதை அவதானித்த சாத்திரியார் சதாசிவம்; என்ன விதானையார் முகம் ஒரு மாதிரியாக இருக்குது என்ன சங்கதி என வினவினார்.

விதானையார்:-

அதையேன் கேட்கிறியள்.என்ர ரிசோட் (Tisort) கைக்கடிகாரம் வேலை செய்யாமல் நின்று விட்டது.

அதற்குப் பற்றி மாற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பிரபலமான மணிக்கூட்டு கடைக்கு போனேன். அங்கு புதிய பற்றி மாற்றப்பட்டது. இருந்தும் மணிக்கூடு இயங்கவில்லை.

இதனால் மணிக்கூட்டை செக் பண்ணிய திருத்துநர், பற்றி பழுதடைந்து அதன் அசிற் சிந்தி விட்டது. கிளின் பண்ணினால் மணிக்கூடு இயங்கும் என்றார்.

மணிக்கூட்டைக் கொடுத்து விட்டு வந்து விட்டேன். நான்கு நாட்கள் கழித்து வருமாறு எனக்குக் கூறப்பட்டது.

நேரமின்மையால் ஆறாவது நாள் அங்கு சென்றேன். மணிக்கூட்டை திருப்பி தந்தார்கள். மணிக்கூட்டின் பாட்ஸ் ஒன்று பழுதடைந்து விட்டதாகவும் அந்த பாட்ஸை இங்கு எடுக்க முடியாதெனவும் அந்த கடையில் வேலை செய்யும் பெண் பிள்ளை ஒருவர் எனக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு அந்த பிள்ளை கூறும் போது, ஏலவே பற்றி அசிற் சிந்தியதால் மணிக்கூட்டை கிளின் செய்ய வேண்டுமென கூறியவரை நான் உற்றுப் பார்த்தேன். உடனே அவர் அந்த பெண் பிள்ளையிடம்"...அதை மாற்றிப் போடலாம்" என மெதுவாகக் கூற, அந்தப் பெண் பிள்ளை, இரண்டா யிரத்து எழுநூறு ரூபாய் செலவு வரும் திருத்தலாம் என்றார்.

முதலில் பாட்ஸ் இல்லை என்று கூறினீர்கள். இப்போது எப்படி பாட்ஸ் கிடைத்தது எனக் கேட்டு விட்டு மணிக்கூட்டைத் திரும்ப வாங்கிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினேன்.

இவ்வாறு விதானையார் கூறிய போது, இடையில் குறுக்கிட்ட மூப்பர்; அப்ப விதானையார், மணிக்கூட்டை திருத்த முடியாது என அவர்கள் தொலைபேசி மூலம் உங்களுக்குத் தெரியப்படுத்தவில்லையோ.

விதானையார்:- அது தான். நான் அவர்களைக் கேட்டேன். மணிக் கூட்டைத் திருத்த முடியாது என்றால் அதை எனக்குத் தொலைபேசியில் தெரியப்படுத்தி இருக்கலாமே என்று. அதற்கு மௌனமே அவர்களின் பதிலாக இருந்தது.

சிறாப்பர்:- இப்ப அந்த மணிக்கூடு எப்படி இருக்குது.

விதானையார்:- மணிக்கூட்டை திரும்ப பெற்றுக்கொண்ட நான் உடனடியாக இன்னொரு மண்ணிக்கூட்டு கடைக்குச் சென்று அதை பரீட்சித்தேன். அதைப் பார்த்த திருத்துநர்; மணிக்கூட்டின் சேர்க் கிற்றில் ஈயத்தால் நிறைய ஒட்டுக்கள் போடப்பட்டுள்ளதாக தெரியப்படுத்தினார்.

சிலவேளை அது பழுதாய்ப் போன இன்னொரு ரிசோட் கைக்கடிகாரத்தின் சேர்க்கிற் ஆக கூட இருக்கலாம் என நான் சந்தேகித்தேன். அவ்வாறு சந்தேகிப்பதில் நியாயம் இருக்கிறது தானே! இவ்வாறு விதானையார் கேட்க, அதை ஆலடியில் இருந்தவர்கள் ஆமோதித்தனர்.

இதன்போது குறுக்கிட்ட வாத்தியார் வைத்திலிங்கம்; உண்மையில அந்த மணிக்கூடு திருத்துபவர்கள் மணிக்கூட்டில் என்ன பிழை என்பதை உரியவருக்குத் தெரியப்படுத்தி, அவரின் சம்மதத்துடன் திருத்த வேலையை செய்திருக்க வேண்டும்.

இதை செய்யாததால தான் சம்பந்தப்பட்ட திருத்த வேலையின் போது பாட்ஸ் மாற்றப் பட்டிருக்கலாமோ என்ற சந்தேகம் கருக்கட்டுகிறது.

சந்தேகம் மட்டுமல்ல அது உண்மையாகவும் இருக்கலாம்.

ஏனெனில் இப்படியான மோசடிகள் நடப்பதாகப் பலரும் குற்றச் சாட்டுக்களை முன் வைத்து வருகின்றனர்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தை இங்கு பரப்புவதற்காக கத்தோலிக்க தேவாலயங்களைத் தம் பொறுப்பில் பறிமுதல் செய்தும், கத்தோலிக்கரை நெருக் குவாரப்படுத்தியும் வந்ததால் கத்தோலிக்கரான கல்தேறாமன வேதனை அடைந்திருந்தார். இன்னும் பலர் இச் சதியில் பங்கு கொண்டிருந்தனர்.

ஒல்லாந்தருக்கு எதிரான இந்தச் சதியில் நல்லூர் முதலியாராகவிருந்த பூதத்தம்பி என்பவரும் பங்கு பற்றியிருந்தார் என அறியப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் இராசவாசல் முதலியாராக விளங்கிய புவிநாயக முதலியின் மகனே இந்த பூதத் தம்பியாவார்.

புவிநாயக முதலியாருக்குப் பின்னர் இவர் நல்லூரின் முதலியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் இராசவாசல் முதலி என்ற பெயரும் பட்டம் தந்தைக்குப்பின் இவருக்கு வழங்கப்படாமையால் இவர் சிறிது மனவருத்தமடைய நேரிட்டது. ஒல்லாந்த மதருருவான பால் தேயஸ் பாதிரியார், புரட்டஸ்தாந்து மதத்தவனான சுண்டிக்குளி (சீதார்) முதலி அந்திராசிக்கு இராசவாசல் முதலிப்பட்டத்தை வழங்கக் காரணமாகவிருந்தார்.

நல்லூர் பூதத்தம்பி முதலியும் சுண்டிக்குளி அந்திராசி முதலியும் உத்தியோக ரீதியில் நண்பர்கள். ஒருநாள் அந்திராசிக்கு பூதத்தம்பியின் இல்லத்தில் ஒரு விருந்து நடந்தது. இராசவாசல் முதலியின் அன்பையும் ஆதரவையும் பெறுவதற்காகப் பூதத்தம்பி இந்த விருந்தை நடத்தியிருக்கலாம்.

அந்த விருந்தில் உணவு பரிமாறிய பூதத்தம்பியின் மனைவி அழகவல்லியின் பேரழகில் அந்திராசி மயங்கி தகாத ஆசை கொண்டான்.

பல பரிசில்களை அனுப்பி அவள் இணக்கத்தைக் கேட்டபோது? இவள் அவனைத் தூசித்து அனுப்ப நேர்ந்தது. அதனால் ஆத்திரமுற்ற அந்திராசி சந்தர்ப்பம் வாய்த்தபோது பூதத் தம்பியியையும் ஒல்லாந்தருக்கெதிரான சதியில் இணைந்து முடிச்சிட்டான் எனக் கருதப்படுகின்றது.

ஒல்லாந்தருக்குகெதிரான சதியின் தலைவன் டொன்லூயிஸ் என்பவன் ஆவான். இந்த டொன்லூயிஸ் பூதத் தம்பிதான் எனவும் சிலர் கூறுகின்றனர். இச்சதித் திட்டம் முறியடிக்கப்பட்டது இச் சதித்திட்டத்தில் பங்கு கொள்ளச் சம்மதித்திருந்த கண்டியைச் சோந்த மனு வேல் அந்திரேடா என்ற சிங்கள முதலி ஒருவன் கடைசி நேரத்தில் அனை வரையும் காட்டிக் கொடுக்க நேர்ந்தது. (தொடரும்)

---

# கடல் புறா



காலத்தின் பதிவு 117

## அன்பின் வழி

அவன் அகூதாவிடம் பயின்றவன் என்று சுட்டிக்காட்டினான் பலவர்மன். "சீனத்துக் கொள்ளைக்காரர்களுக்கு சூளுக்கள் சளைத்தவர்களல்ல பலவர்மா! அதுதவிர, இந்தச் சோழர் படைத்தலைவன் மரக்கலமும் கரையில் இழுக்கப்பட்டுக் பழுது பார்க்கப்படுகிறது. இந்தச் சமயத்தில் நான் துறைமுகத்தில் புகுந்தால் என்னை எதிர்க்க யாருமில்லை" என்று விளக்கினான் இடும்பன்.

பலவர்மன் மெல்ல நகைத்தான். அந்த நகைப்பினால் கோபம் உச்சநிலைக்குப் போகவே, "ஏன் நகைக்கிறாய்?" என்று கரகரப்பும் கடுமையும் நிறைந்த குரலில் கேட்டான் இடும்பன்.

"இடும்பா! நாளைக்கு எதற்கும் துறைமுகம் பக்கம் வந்து பார். அல்லது உன் ஒற்றர்களையாவது அனுப்பிக் கவனிக்கச் சொல். சோழர் படைத்தலைவன் தனது மரக்கலத்தைக் கரைக்கு இழுத்ததும், கடற்கரைக் கொள்ளையர் மரக்கலங்களைத் துறைமுக மார்க்கத்தில் சக்கரவட்டமாக நிறக வைத்து அவற்றில் பெரும் போர்க் கலங்களையும் அமைத்திருக்கிறான் அந்தச் சக்கரவட்டத்துக்குள் நுழைந்துதான் அந்த மரக்கலமும் அக்ஷயமுனைக்கரையை நாட முடியும். அப்படி நுழையும் மரக்கலம் எதுவாயிருந்தாலும் அதைச் சுற்றிலும் கொள்ளையர் மரக்கலங்கள் சக்கரத்தின் பற்களைப் போல நெருங்கும்.

நுழையும் மரக்கலத்தின் கதி என்னவாகுமென்று நான் சொல்ல வேண்டுமா?" என்று கேள்வி கேட்பதுபோல் உள்ள அபாயத்தையும் இளையபல்லவனின் போர் முறையையும் விளக்கிய பலவர்மன் மேலும், சொன்னான். "அது மட்டுமல்ல இடும்பா! வில்வலனும் காட்டுப் பகுதி வழியாக நகரத்துக்குள் நுழைய முடியாது. அந்தப் பகுதியில் அமீர் என்ற அரபு நாட்டான் காவலிருக்கிறான். அவன் தான் குறுவாளெறிந்து உன் சகோதரனைக் கொன்றவன்.

அந்தப் பகுதியில் காட்டைக் கவனி மதில் ஓரமாக இருந்த காடு அரைக் கால் காததத்துக்கு அழிக்கப்பட்டிருக்கிறது. மரக்கலத்தைச் செப்பனிட நகரத்தை அடுத்துள்ள மரங்களாகப் பார்த்து அமீர் வெட்டியிருக்கிறான். இதனால் இரட்டைலாபம். ஒன்று மரக்கலத்துக்கு நமது நாட்டின் வயிரம் பாய்ந்த மரங்கள் கிடைத்தன.

இன்னொன்று காட்டுக்கும் கோட்டை மக்களுக்கும் இடைவெளி நன்றாக ஏற்பட்டதால் அமீரின் கண்களில் படாமல் யாரும் கோட்டையை அணுக முடியாது. இடைவெளியில் ஓடிவரும் படையை அழிக்கப் பலமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறான் அமீர் என்று.

இந்த விவரங்களைக் கேட்ட இடும்பன் முகத்தில் அச்சத்துக்குப் பதில் கோபமே அதிகம் ஏற்பட்டது. "இத்தனையையும் ஏன் அனுமதித்தாய்?" என்று வினவினான்.

"வேறு வழியில்லை" என்றான் பலவர்மன்.

"வழியைக் கண்டுபிடிப்பது உன் பொறுப்பல்லவா?"

"ஆம்"

"அப்படியானால் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?"

"இரண்டு முறைகளைக் கையாண்டேன், பலிக்கவில்லை."

"என்ன முறைகள்?"

"அவனை வசப்படுத்தும்படி என் மகளைத் தூண்டினேன். வேறு ஒருத்தியிடம் அவன் மனம் வயித்திருப்பதால் அவன் இணங்கமாட்டானென்று எதிர்பார்த்தேன். இணங்காவிட்டால் நமது வழக்கப்படி அவனை உங்களுக்கு இரையாக்கி விடலாம் என்று திட்டம் போட்டேன்.

அதற்காகச் சாட்சிகளையும் தயாரித்தேன். ஆனால் அந்தத் தந்திரம் பலிக்கவில்லை. மஞ்சளழகியை மணம் புரிந்து கொள்ள அவன் முன் வந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுறும் இதயம்!

வீணான நேரம் வெந்து பொசிங்கிட
தானாகவே பேனா கையில் நுழைந்தது
தேனான உணர்வுகள் உள்ளத்தே ஊற,
காதலிக்கு மடல் பேனா அசைந்தது
பல நாட்களாய்!
தேனாத அவள் வியப்புடன் யன்னலில்
தேவதையாய் காட்சி தந்தாள்
கன்னங்கள் பளபளக்க
செவ்விரல்கள் விரிய
விண்ணைத் தொடும் விழிகளை
அசைத்து சிரித்தாள்
இன்பப் பெருக்கால் இருக்கை வெறுத்தது
ஏக்கத்துடன் கால்கள் முன் நகர்ந்தன
மனதை கட்டிப் போட போராட்டம்
நேரில் பேசி விடலாம் என்ற நப்பாசை
திடிரென...!
பின் வாங்கின கால்கள்
எண்ணியவை
கோயில் சிதறு தேங்காய் போலாயிற்று!
வெலவெலத்துப் போனேன்
வெட்கத்தின் உச்சியில்
ஏன்...?
என்ன பிள்ளை பார்க்கிறாய்?
அவள் அப்பனின் உரத்த குரல்!
மானந்தன், அல்வாய்.

# பௌர்ணமியாகவே வீற்றிருக்கிறாய்!



ஒற்றைப் பௌர்ணமியாய்
என் எண்ண வானெங்கும்
நீ தான் ஒளி வீசுகிறாய்!
நட்சத்திர சிணுங்கல்களை
நகர்த்தி ஒரு புறம் வைத்து விட்டு
உன்னுடன் தானே
அன்புக் கதைகள் பேசுகிறேன்!

முகிலெடுத்து உடுத்தும் உதறியும்
தகிக்க விடும் விழிகளின் சிறகடிப்பில்,
அல்லியாய் என் மனம் அலர்ந்து கிடக்கிறது!

என் விழிகளிலே நீ தேய்பிறையானாலும்
நினைவுகளில் அமாவாசையை
விழுங்கும் பௌர்ணமியாகவே வீற்றிருக்கிறாய்!

உயிர் சுமந்து உனையேகுமென்;
இதயத்துக்குத் தெரிவதில்லை
உன்னுள் சுவாசக்காற்றின்
சேமிப்பு இல்லையென்று!
சூரியநிலா, உசன்.

# அர்ச்சுனன் அம்பு

கறைகள் கண்ட
மருத்துவனொருவன்
குறைகள் தீர்க்க
குரல் கொடுத்தான்

சிறைக்குள் தள்ள - சுகாதார
துறையும் எத்தனிக்க
சேதியறிந்த சனம்
வீதியில் திரள
எழுந்தது மகத்தான புரட்சி!

மருத்துவத்துறையின்
மற்றொரு பக்கம்
கிழித்து தொங்கவிடப்பட்டதால்,
மருத்துவத்தில் ஓர்
மகத்துவத்தை கண்டதால்,
மருத்துவனொருவன் நாயகனானான்
மக்கள் மத்தியில் போராளியானான்

சிவகரன் விநோஜிதன், அல்வாய்.



# மௌனத்தின் தேடல்- 725



## நாவடக்கம்!

நாக்கை அடக்கு,
நானிலத்தில் நல்லவனாய் வாழ்!
தேனான வார்த்தை பேசி,
சொந்தங்களை தினம் சேர்!
பூவே வாழ்வின் தத்துவம்
அது நிலையற்றது...
இன்று பூ நாளை வாடிய மலர்
மறுநாள் குப்பை
இதை உணர்ந்தால் உன் வாழ்க்கை உயரும்!

இ.உதிஸ்ரன்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

## ஆராய்...சாராய்...

உன்னை நீ அறி
உலகை அறிந்திடுவாய்
கண்ணை நம்பாதே
பிறர் கருத்தை நம்பாதே
கண்டதை கேட்டதை
நன்றாய் ஆராய்... பிறர் பக்கம் சாராய்...
எடு முடிவை
அந்த முடிவு உண்மையாய் இருக்கும்
அதில் நேர்மை நிறைந்திருக்கும்
மாவை நா. கஜேந்திரன்.


## ஞானம்

அறுசுவையும் பிரித்தறியும்
நாவும் ஆறும் தெரிந்தவராயினும்
பயங்கரமான ஆயுதப்பட்டியலில்
தயங்காமல் முதலிடத்தை கொடுப்பர்
இதைத் தரமாக்கி நீள வைத்து
இறைவன் இருப்பிடமாக விளங்கும்
நெற்றிப் பொட்டில் யாவரும் விரும்பும்
வெற்றித்திலகத்தையிட முயன்ற போது
வெற்றிகள் நிரந்தரமானவை அல்ல
இதை நிலை நிறுத்த வேண்டுமாயின்
மனித நேயத்தையும் வளர்க்க வேண்டும்
என்றும் எண்ணம் மேலோங்கியது
க.நாகராசா, நுணாவில்.

## கொடிய விஷம்

நீதி-நியாயம்-மனச்சாட்சி
அனைத்தையும் கொன்று விடும்
இரட்டை நாக்குகொடுத்த
வாக்கை மறுத்து
தன்னலம் தேடும் இரட்டை நாக்கு
குடும்பம்-சமூகம்-தொழில் நிலை
அங்கெல்லாம் உண்மையை
உதறித்தள்ளும் இரட்டை நாக்கு
கொடிய விஷத்திற்கு நிகராக
இந்த இரட்டை நாக்கை
இனம் கண்டு ஒதுக்கி விட்டு
வாழ முயற்சிப்போம்
அபி குலமாலிகா,
சித்தன்கேணி.

# மௌனத்தின் தேடல்- 726




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நாவடக்கம்

வார்த்தைகளை அளவோடு பேசிவிடு இல்லையேல்
வம்பு சண்டைக்குள் உன்னை மாட்டி விடுமே
கெட்டவார்த்தை பேசி கெடுதல் செய்ய நினைத்தாயோ
கேடு உன்னை வந்து சேர்ந்திடுமே
தீயினால் சுட்ட புண் ஆறினாலும்
நாவினால் சுட்ட புண் ஒரு போதும் ஆறாதே
நரம்பில்லா நாக்கால் நல் உள்ளங்களை காயப்படுத்தாதே
நச்சுப் பாம்பாய் வந்து உன்னையே பதம் பார்க்கும்
நல்லதையே சிந்தித்து நல்லதையே பேசி
நல்லதையே செயற்படுத்தி நல் வாழ்வு வாழ்வாயாக!
ஆ. செல்வி, திருவாவலூர்.

## தடுமாற்றம்

நல்ல குணமுள்ள சொல்வாக்கு செயற்திறனால்
புகழ் செல்வாக்கு தேடி வரலாம் வந்ததும்
யாகாக்காராயினும் நா காக்க எனும் வள்ளுவர் வாக்கதனை
மறந்து புகழ்ச்சியின் போதையில் சிக்கிய
தலைக்கணத்தால் மெய் மறந்து நிலை தடுமாறும்
சொற் பிறழ்வுகளால் தன் நாக்கு தனக்கெதிரியாகி
அகழ பாதாளத்தில் விழும் நிலைக்கு வைத்து விடலாம்
சி.மகாலட்சுமி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : கர்ணன்
பாடியவர்கள் : சுசீலா
வரிகள்: கண்ணதாசன்
இசை: வீ.ஆர்



கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

கால்கள் இங்கே மேனியும் இங்கே
கால்கள் இங்கே மேனியும் இங்கே
காவலின்றி வந்தன இங்கே
ஆ ஆ ஆ ஆ ஆ
கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
மணி கொண்ட கரமொன்று அனல் கொண்டு வெடிக்கும்
அனல் கொண்டு வெடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
மலர் போன்ற இதழின்று பனி கண்டு துடிக்கும்
துணை கொள்ள அவனின்றி தனியாக நடிக்கும்
துயிலாத பெண்மைக்கு ஏனிந்த மயக்கம்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே

இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
இனமென்ன குலமென்ன குணமென்ன அறியேன்
குணமென்ன அறியேன்
ஈடொன்றும் கேளாமல் எனையங்கு கொடுத்தேன்
துடி கொண்ட மதயானை உயிர் கொண்டு நடந்தான்
குறை கொண்ட உடலோடு நானிங்கு மெலிந்தேன்
ஆ ஆ ஆ ஆ

கண்கள் எங்கே நெஞ்சமும் எங்கே
கண்டபோதே சென்றன அங்கே
கண்கள் எங்கே

# ஓடிய கால்கள் ஓய்கின்றன

'கடந்த வாரம்தான் கவுண்டி கிரிக்கெட் போட்டியில் 7 விக்கெட்டுகளை எடுத்தேன். இன்னும் சில காலம் கிரிக்கெட் ஆடுவதற்கான தெம்பு என்னிடம் இருக்கிறது. ஆனாலும் இன்று இல்லையென்றாலும் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெற்றுத்தான் ஆக வேண்டும். அதனால் இதையே ஏற்றுக்கொள்கிறேன்' எனப் பேசியிருக்கிறார் ஆண்டர்சன்.

அவர் கிரிக்கெட் ஆட வந்து 21 ஆண்டுகள் ஆகிவிட்டது. 2003 இங்கிலாந்து சம்மரில் அப்போதுதான் மரத்திலிருந்து பறிக்கப்பட்ட அப்பிளைப் போல ஃப்ரெஷ்ஷாக இங்கிலாந்து அணிக்கு அறிமுகமானவர். ஒரு மரதன் ஓட்டத்தையே நிறைவு செய்திருக்கிறார். 21 ஆண்டுகள் ஒரு வேகப்பந்து வீச்சாளர் கிரிக்கெட் ஆடுவது என்பது அசாத்தியமான விடயம்.

ஒரு பட்டரால் நீண்ட நெடிய ஆண்டுகள் ஆட முடியும். அதற்கு இங்கே பல உதாரணங்களும் இருக்கின்றன. ஆனால், ஒரு பௌலராக இத்தனை ஆண்டுகள் என்பது வியக்கத்தக்கதுதான். இங்கிலாந்து கிரிக்கெட் என்பது ஒரு சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலையைப் போன்றது. அவர்களின் ஒவ்வொரு சம்மர் சீசனுக்கும் புதிய புதிய பட்டர்களையும் பௌலர்களையும் அறிமுகப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். ஆக அணியில் இடத்தைத் தக்கவைத்துக்கொள்ள போட்டி அதிகமாக இருக்கும்.

இப்படியொரு சூழலில் ஒரு பௌலர் 21 ஆண்டுகள் மூச்சுவிடாமல் விடாப்பிடியாக ஓடி பந்துவீச வேண்டுமெனில் அவர் காலத்துக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

அதை ஆண்டர்சன் ஒவ்வொரு கட்டத்திலும் சரியாக செய்து கொண்டே இருந்தார். "கிரிக்கெட்டில் ஒரு பௌலராகப் புதுப்புது விடயங்களை கற்றுக் கொள்ள தயங்கக் கூடாது. இல்லையென்றால் இளம் பௌலர்கள் உங்கள் இடத்தைப் பிடித்துக் கொள்வார்கள். ஜேம்ஸ் ஆண்டர்சன் அதைப் புரிந்து தொடர்ந்து சரியாக செய்து வருகிறார். அதனால்தான் தன்னுடைய கடைசி போட்டியிலும் அவர் அணியின் முக்கியமான பௌலராக இருக்கிறார். பொதுவாக ஒரு விடயத்துக்கு அடிமையாவது தீங்கு என்பார்கள். ஆனால் ஆண்டர்சன் பௌலிங் எனும் கலைக்கு அடிமையாகியுள்ளார். அது நல்லதுதான்" என ஆண்டர்சனுடன் நீண்ட காலம் நின்று பந்து வீசிய உற்றதோழன் ப்ராட் கூறியிருக்கிறார்.

ஆண்டர்சன் தன்னை நீண்ட காலத்துக்குரியவனாக மாற்றிக் கொள்ளும் வித்தையும் தெரிந்து வைத்திருந்தார். டெஸ்ட் போட்டிகள்தான் தன்னுடைய களம் என்பதை புரிந்துகொண்டு மற்ற ஃபார்மட்களுக்கு அவர் அவ்வளவாக முக்கியத்துவமே கொடுக்கவில்லை. தன்னுடைய ஆற்றல் மொத்தத்தையும் டெஸ்ட் கிரிக்கெட்டிலேயே கொட்டினார். ஆரம்பத்தில் புயல் வேகத்தில் வீசிக் கொண்டிருந்தவர் வயதாக வயதாக தன்னுடைய வேகத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டு கட்டர்கள் போன்ற வேரியேஷன்களில் அதிக கவனம் செலுத்தினார்.

ஆண்டர்சன் நன்றாகவே ஆடிக் கொண்டிருந்தாலும் வயதைக் காரணம் காட்டி அடுத்த தலைமுறை வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தது இங்கிலாந்து கிரிக்கெட் போர்ட். "எப்போது ஓய்வு பெறுவார்" என்கிற பேச்சு எழுந்த பிறகு மட்டுமே 100 விக்கெட்டுகளை வீழ்த்திவிட்டார்.

சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கிறார். அவருக்கு அடுத்ததாக அதிகமான டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருப்பது ஆண்டர்சன். அதிகமான டெஸ்ட் போட்டிகளில் ஆடிய டாப் 10 வீரர்களில் ஆண்டர்சனும் ப்ராடும் மட்டும்தான் முழுநேர பௌலர்கள்.

ப்ராட் 167 டெஸ்ட் போட்டிகளில் ஆடி ஓய்வு பெற்று விட்டார். ஆண்டர்சன்... என்றைக்குமே ஒரு தலையாய பௌலராக கிரிக்கெட் வரலாற்றில் நினைவு கூரப்படுவார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

409

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஈரல் பாதுகாப்பும்... குடிவகை பாவனையும்...


எமது பிரதேசத்தில், குறிப்பாக இளம் வயதினரிடையே மதுபான பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த மதுபான பாவனை காரணமாக ஈரலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறுகிய கால மற்றும் நீண்ட கால ஈரல் பாதிப்புகள், இந்த அதிகரித்த மதுபானப் பாவனையால் ஏற்படுகின்றன. குறுகிய கால ஈரல் பாதிப்பான, ஈரல் அழற்சி (Alcoholic hepatitis) என்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும்.

இதன் காரணமாக கடுமையான நோய் நிலைமை மற்றும் மரணம் கூட சம்பவிக்கலாம். இந்நோய் நிலையின் அறிகுறிகளாக கண் மற்றும் உடல் மஞ்சள் நிறமாதல், வலது பக்க மேல் வயிற்றுப் பகுதியில் நோ காணப்படல், உணவில் விருப்பமின்மை, வாந்தி, நினைவுக் குழப்பங்கள் போன்றவை காணப்படுகின்றன.

இந்த நோய் நிலைமை ஏற்பட்டவர்களுக்கு, பின்னர் சிறுநீரக பாதிப்பு, குருதி உறையாத தன்மை போன்ற தீவிர நோய் நிலைமைகளும் ஏற்படும். இது, இறுதியில் Acute liver failure எனப்படும் குறுகிய நேரத்தில் ஏற்படும் ஈரல் செயலிழப்பிற்கு இட்டுச் செல்லும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகளே காணப்படுகின்றன. எனவே, இந்நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு மதுபானம் அருந்தாமல் தவிர்ப்பதே சிறந்த வழியாகும்.

மதுபானம் அருந்துவதால் ஏற்படும் நீண்ட கால பாதிப்பாக Liver Cirrhosis எனப்படும் ஈரல் பழுதடையும் நிலை ஏற்படும். ஈரல் பழுதடைந்து விட்டால், மீண்டும் அதனை பழைய நிலைக்கு மாற்ற முடியாது. ஈரல் செயலிழப்பால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அல்லது விளைவுகளுக்கு மட்டுமே சிகிச்சையினை மேற்கொள்ள முடியும். ஈரல் பழுதடைந்த ஒருவருக்கு, அதன் செயற்பாடுகளை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றுவதாயின், ஈரல் மாற்று சத்திரசிகிச்சை மட்டுமே காணப்படும் ஒரே தீர்வாகும்.

நிரந்தர ஈரல் பழுதடைதல் ஏற்பட்டால், அதன் அறிகுறிகளாக கால்கள் மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வீக்கம் காணப்படல், கண்கள் மஞ்சள் நிறமடைதல், நினைவுக் குழப்பங்கள் காணப்படல்,



இரத்த வாந்தி எடுத்தல் போன்றவை காணப்படுகின்றன. நிரந்தர ஈரல் பாதிப்பு ஏற்பட்டவர்களில் ஈரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன. எனவே, நிரந்தர ஈரல் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். முதலாவதாக, இந்நோய் நிலைமை கண்டறியப்பட்ட உடன் வைத்தியர் கூறும் உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன், மதுபானம் அருந்துவதை முற்றாக தவிர்க்க வேண்டும். இந்நோய் கண்டறியப்பட்டவர்கள் ஆரம்பத்திலேயே, வாயினூடாக Camera செலுத்தி செய்யப்படும் Endoscopy என்ற பரிசோதனையைச் செய்ய வேண்டும். இந்நோய் உள்ளவர்களுக்கு களம், இரைப்பை போன்ற பகுதிகளில் இரத்தக் குழாய்கள் வீக்கமடைதல் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குருதிக் குழாய்களில் வீக்கம் காணப்படுமாயின்,

அவர்களுக்கு இரத்த வாந்தி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும். இது ஒரு அவசரமான, ஆபத்தான நிலையாகும். எனவே, ஆரம்பத்திலேயே இந்நிலையை கண்டறிந்தால், அதற்குரிய சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

கடுமையான இரத்தக் குழாய் வீக்கம் உள்ளவர்களுக்கு Endoscopy மூலம் அதனை கட்டுப்படுத்துவதற்குரிய Plastic Band போடுதல் மற்றும் மருந்தேற்றுதல் போன்ற வழிமுறைகள் உள்ளன. சிறியளவில் வீக்கம் உள்ளவர்களுக்கு, மருந்துகளைப் பாவிப்பதன் மூலம், அந்த வீக்கத்தினை குறைத்துக்கொள்ள முடியும்.

கால் மற்றும் வயிற்றுப் பகுதியில் வீக்கமுடைய, ஈரல் செயலிழந்த நோயாளிகள் தமது உணவில் உப்பின் அளவை குறைவாக எடுக்க வேண்டும். குறிப்பாக, உப்பு அதிகமாக உள்ள உணவு வகைகளான கருவாடு, ஊறுகாய், மாமைட் மற்றும் பக்கற்றுகளில் அடைக்கப்பட்ட உப்பு சேர்க்கப்பட்ட உணவுப் பதார்த்தங்களை உட்கொள்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

புரத உணவுகளை சாதாரணமான அளவுகளில் எடுக்கலாம். ஆனால், அதிகமாக புரத உணவுகளை உட்கொள்வது நல்லதல்ல. ஈரல் செயலிழப்பு ஏற்பட்டவர்களில், ஈரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருப்பதால், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஈரலை Scan செய்து பார்ப்பதன் மூலமும், ஒரு குறிப்பிட்ட இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமும் ஈரல் புற்றுநோய் இருப்பதைக் கண்டறியலாம். இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், அதற்கு பலவிதமான சிகிச்சைகளை உடனேயே மேற்கொள்ளலாம். எனவே, இப்பரிசோதனைகளைச் செய்வதன் மூலம், ஆரம்பத்திலேயே ஈரல் புற்று நோயை கண்டறிவது பயனுள்ளதாக இருக்கும்.

இதைவிட, ஈரல் செயலிழப்பு நோயாளிகளில் மலச்சிக்கல் காணப்படுமாயின், அவர்களில் நினைவுக் குழப்பங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும். எனவே, ஒரு நாளைக்கு இரண்டு தடவையாவது, மலம் கழிக்கத்தக்கவாறு மருந்துகளை எடுக்க வேண்டும்.

Lactulose எனப்படும் பாணி மருந்தினை, அவர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் பாவிக்க வேண்டும். இதனால், நினைவுக் குழப்பங்கள், தூக்கத்தில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றை சரி செய்ய முடியும். எனவே, மதுபானப் பாவனையை முற்றாக தவிர்ப்பதன் மூலம் ஈரலில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

Dr. அனுராதா கஜேந்திரன்
உணவுக் கால்வாய், ஈரல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆளுநர் செந்தில்-சிறீதரன் எம்.பி

# விசேட சந்திப்பு



(திருமலை)

தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பானது கிழக்கு மாகாண ஆளுநரின் மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதன்போது பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. (நி)

# அலி சப்ரி ரஜீம் பிணையில் விடுதலை



(புத்தளம்)

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நேற்று அலிசப்ரி ரஹீம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


கட்டடம் ஒன்றுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்று அவர் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணியுடன் சரணடைந்த போது கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அவரைக் கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (நி)

# தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏதுமில்லை

## மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

22 ஆம் திருத்தச் சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எவ்வித சிக்கலும் ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

விசேட நேர்காணலில் பங்கேற்று அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (நி)

## இன்று ஒரு தகவல் 189



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பிறவியின் பெரு நோக்கம்

ஒரு அம்மா அவர்கள் வீட்டுக்காரரைப்பற்றி நிறைய குறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். ஒரு பெரியவரிடம் இதைப் போய் முறையிட்டார்களாம். அவர் என்ன செய்திருக்கிறார் தெரியுமா... இந்த அம்மாவை உட்கார வைத்து, சரி அம்மா அவரைப் பற்றி குறைகளையெல்லாம் சொல்லுறீர்கள் சரி... இன்றைக்கு அவர் செய்த நன்மைகளைப் பற்றி சொல்லுங்கள் என்று கேட்டிருக்கிறார்.

அந்த அம்மா அவர் செய்த நல்ல காரியங்களை ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்தி சொல்லியிருக்கிறார்கள். ஏம்மா! இவ்வளவு நன்மைகளை அவர் செய்திருக்கிறார். அப்புறம் என்ன உங்களுக்கு குறை? என்று கேட்டிருக்கிறார்.

என்னை பாராட்ட வேண்டிய நேரத்திலே பாராட்டுறதில்லை! அலட்சியமாக நினைக்கிறார்! அது தான் குறையாகத் தெரிகிறது என்று சொன்னார்கள்.

சரி இனிமேல் நீங்க அவராலே அடைஞ்ச, இனி அடையக்கூடிய நன்மைகளை மட்டும் நினைத்துக் கொண்டு நன்மையே பேசுவது என்று ஒரு தீர்மானம் செய்து கொள்ளுங்கள். பார்க்கலாம்! என்று சொல்லியிருக்கிறார் அந்தப் பெரியவர்.

அந்த அம்மாவும் ஒரு வாரம் இதை ஒரு பயிற்சியாகவே செய்து பார்த்தார்களாம். அவ்வளவு தான்! அவருடைய முகத்திலே ஒரு தனி மலர்ச்சி ஏற்பட்டு போய்விட்டது. ஒருவர் மேலே குறையை சொல்லுவதை விட அவர் செய்த நல்ல செயலை நினைத்து அவருக்கு பாராட்டும் நன்றியும் சொல்லும் போது மன அமைதி ஏற்படும். முகத்திலே புன்சிரிப்பு வரும். எப்பவும் சந்தோஷமாக இருக்க முடியும்.

இது ஏதோ வெறும் உபதேசம் இல்லை அனுபவசாலிகள் சொல்லுகின்ற உண்மை இது. ஏன் இந்த உலகத்திலே பிறந்திருக்கின்றோம்? மனிதப் பிறவியினுடைய நோக்கம் என்ன? இந்த கேள்விக்கு அந்தப் பெரியவர் (அருள் தந்தை வேதாந்த மகாரிஷி ) என்ன சொல்லுகிறார் தெரியுமா?

எனக்கு என்ன தேவை? என்று உன்னை நீயே கேட்டுப்பார். மனநிறைவும் மகிழ்ச்சியும் தான் தேவை என்பது புரியும். இது தான் மனிதப் பிறவியின் பெரு நோக்கம் ! என்று சொல்லுகிறார் அவர்.

மனித வாழ்வின் வெற்றிக்கெல்லாம் சிகரமானது மனநிறைவு தான். அதை உணர்ந்து கொள்ளுவது - பயிற்சி செய்வது - பயனடைவது இது எல்லாம் மிகவும் சுலபம் . முயற்சி தான் தேவை என்கிறார் அவர். நாம் எங்கே இருக்கின்றோம். எப்படி இருக்கின்றோம். எந்த இடத்திலே இருக்கின்றோம். என்பதை முதலிலே கணித்துக் கொள்ள வேண்டும். அதாவது வயதிலே- வாழ்விலே - கல்வியிலே - வளத்திலே-அதிகாரத்திலே நாம் எந்த நிலைமையிலே இருக்கின்றோம் என்பதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அதைக் கொண்டு நமக்கு- குடும்பத்திற்கு- சுற்றத்தாருக்கு - ஊருக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். முடிந்த அளவிலே செய்ய வேண்டும்.

அதை செய்வதற்கு வேண்டிய திறமையை வளர்த்துக் கொள்வதற்கு திட்டம் போட்டு முறையான பயிற்சி முலமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கி விடும் என்கிறார் அவர். எவரிடம் இருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. எதிர்பார்க்கிறது பெரும்பாலும் ஏமாற்றத்திலே தான் முடிகிறது. இந்த ஏமாற்றம் இன்ப ஊற்றை அடைத்துவிடும் என்றார்.

நல்லது செய்யிறதோடு விட்டுவிட வேண்டும். அதற்குப் பதில் எதிர்பார்ப்பதை மறந்துவிட வேண்டும். அவசியம் இல்லாமல் அடுத்தவர்கள் விடயத்தில் தலையிடக் கூடாது. நம்முடைய கடமையிலிருந்து நழுவக் கூடாது.

இதனாலே மற்றவர்களுக்கு நம்ம மேலே மதிப்பு ஏற்படும் நம் மனதுக்கு ஒரு அமைதியும் கிடைக்கும். மூன்று விடயத்தை நாம் முக்கியமாக பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார் அந்தப் பெரியவர். சகிப்புத் தன்மை விட்டுக் கொடுத்தல் தியாகம்.

தேவைக்குத் தகுந்த மாதிரியும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரியும் இதை பயன்படுத்த வேண்டும். இப்படி செய்ய ஆரம்பித்துவிட்டால் இந்த உலகமே எங்கள் நட்பை விரும்புமாம்.

எமக்கு முன்னாடியும் -பின்னாடியும் சூழ்ந்தும் ஊடுறுவியும் இயற்கையோடு பெரிய ஆற்றல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒழுங்கு தவறாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. மனித செயல் ஒவ்வொன்றுக்கும் தகுந்த விளைவை இன்பமாகவே துன்பமாகவே கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த உண்மையை மறக்கக் கூடாது. அந்த பேராற்றலை மதித்து எங்கள் செயலிலே அளவு- முறை ஒழுங்கு இதை கடைப்பிடிக்க வேண்டும். இது தான் உயர்வான தெய்வ வழிபாடு என்பது.

சும்மா வேடம் போட்டுக் கொண்டிருக்கிறது எல்லாம். வழிபாடு ஆகாது அந்த பேராற்றலோடு நம்ம மனம் இணைந்து விட்டது என்றால் நமக்கு எப்பவும் மகிழ்ச்சி தான். அமைதி தான்-நிறைவு தான் பிறவியின் நோக்கம் என்கிறது அப்போது தான் நிறைவேறும்.

இது தான் அந்தப் பெரியவர் சொல்லியிருக்கிற நுட்பம் அவர் சொல்கின்ற நிலைக்கும் நாம் இருக்கிற நிலைக்கும் எவ்வளவு தூரம் என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். வேறு ஒன்றும் வேண்டாம். சார் விட்டுக் கொடுக்கிறது என்று சொன்னாரே அந்த ஒரு விடயம் சரியா இருக்கா நம்மளிடம்?


இரண்டு நெருங்கின சிநேகிதர்கள். ஒருத்தன் சொன்னான் என்னிடம் இப்ப இரண்டு லட்சம் ரூபாய் இருந்தால் அதிலே பாதி ரூபாயை உன்னிடம் கொடுத் துவிடுவேன் என்றான்.

உன்னிடம் 2 கார் இருந்தால் என்ன செய்வாய்? என்றான் ஒரு கார் உனக்குக் கொடுத்து விடுவேன் என்றான். உன்னிடம் 2 இல்லம் இருந்தால் என்ன செய்வாய்? என்றான் அதில் ஒன்றை உனக்குக் கொடுத்து விடுவேன் என்றான். சரி உன்னிடம் இரண்டு பேனா இருந்தால் ஒரு பேனாவை என்னிடம் கொடுத்து விடுவாயா என்றான்.

அது மட்டும் முடியாது கொடுக்க மாட்டேன் என்றான். அவன் என்னது? பணம்-கார்-இல்லம் எல்லாம் தருவாய் என்றாய். பேனாவை மட்டும் தரமாட்டேன் என்கிறாய் ? என்று கேட்டான். இரண்டு பேனா- நிஜமாகவே என்னிடம் இருக்குதே இதனால் அப்படிச் சொன்னேன். என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டில் 40 சிறுவர்கள்
# எச்.ஐ.வி தொற்றால் பாதிப்பு!



**(கொழும்பு)**

**கடந்த 2023 ஆம் ஆண்டில் 40 சிறுவர்கள் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 607 ஆகவும் 2023 ஆம் ஆண்டில் 694 ஆகவும் அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட 694 பேரில் 613 ஆண்கள் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. தொற்று அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# ஜனாதிபதித் தேர்தலின் போது பாரபட்சமின்றி செயற்படுங்கள்

## அரச அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பு வெளியான பின்னர் நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் செயற்பட வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள் சட்டத்தை பாரபட்சமின்றி அனைவருக்கும் பொதுவாக செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சட்டத்தை உரிய முறையில் கடைப்பிடிக்காது சில அதிகாரிகள் செயற்படுவதால் அங்கு மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் மக்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படக்கூடாது என அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)

# இலங்கை நோக்கி வந்த சரக்குக் கப்பலில் தீ

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வந்த சரக்குக் கப்பலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பாரிய தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்தக் கப்பல் இந்தியாவின் குஜராத்தின் முந்த்ரா துறை முகத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது கோவாவின் தென்மேற்கே உள்ள கார்வார் கடற்பகுதியில் தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

MV Maersk Frankfurt என்ற கப்பலே தீ விபத்துக்குள்ளாகி உள்ளது. தீ விபத்தில் கப்பலின் முன்பகுதி வெடித்துள்ளது.

சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுக்கவும் கப்பல் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தீயணைப்பு நடவடிக்கைகளை இந்திய கடலோர காவற்படை முன்னெடுத்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு, நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மைத்திரிக்கு - ரணில் ரணிலுக்கு - விஜயதாஸ

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க இருந்தார்.

மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்.

ஆக, இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்த ஆட்சியாக அது இருந்தது.

இதனை இன்னும் விரிவாகக் கூறுவதாயின், நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் கூட்டாக ஆட்சி அமைக்கின்ற ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

ஆம், இந்த நாட்டை கந்தறு நிலைக்குக் கொண்டு வந்த இரண்டு பிரதான கட்சிகளும் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதினூடாக, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பை இறைவன் வழங்கினான் என்று கூறுமளவுக்கு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் சமகாலத்தில் பதவி வகித்தனர்.

இதற்கும் மேலாக, வன்னிப் பெருநிலப்பரப்பில் கொடிய போர் நடத்தி பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்திருந்தன.

இதையும் கடந்து இலங்கையில் தமிழின அழிப்பு நடந்தது என்ற குற்றச்சாட்டுக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற கருத்துக்களும் வலுப்பெற்றிருந்ததுடன் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நியாயபூர்வமான பரிந்துரைகளும் சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்டிருந்தன.

மேற்குறிப்பிட்ட அத்தனைக்கும் பரிகாரம் தேடக்கூடியதான அருமையான சந்தர்ப்பத்தைக் காலம் இலங்கைத் திருநாட்டுக்கு வழங்கியதாயினும் அதனைத் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ள மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் முன்வரவில்லை.

மாறாக, இருவரும் தர்க்கம் புரிந்தனர். இருவருக்கும் இடையில் கடும் அரசியல் மோதல் ஏற்பட்டது. ஈற்றில் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியை மைத்திரிபால சிறிசேன வெறுதாக்கினார்.

இந்தநடவடிக்கை பூதாகரமாகிப்போக, தன் பரமஎதிரியான மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் அளவுக்கு ரணில் மீது மைத்திரி கோபம் கொண்டார்.

ஆயினும் நீதிமன்றத்தை நாடிய ரணில் விக்கிரமசிங்க அதில் வெற்றி கண்டாராயினும் அவரின் சமகால அரசியலில் மைத்திரி போன்ற ஒரு அரசியல் எதிரியை தவிர்க்க நினைத்தாரில்லை.

இதன் விளைவாக இப்போது ஜனாதிபதி ரணிலுக்கு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ எதிர்வினையாற்றத் தலைப்பட்டுள்ளார் என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

# மூளாய் வைத்தியசாலையில் நகைகள், பணம் திருட்டு

யாழ்ப்பாணம் மூளாய் வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு பணியாளர்களின் நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு பணிகளில் ஈடுபடும் பணியாளர்களின் கடமை நேரத்தில், அவர்களின் உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதற்காக அறையொன்றினுள் 09 பெட்டகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வழமை போன்று நேற்று முன்தினம் (19) பணியாளர்கள் தமது உடைமைகள் மற்றும் நகைகளைப் பெட்டகத்தினுள் வைத்து பூட்டி விட்டு, கடமைகளுக்கு சென்றிருந்தனர்.

பணியாளர்கள் கடமை முடிந்து வந்து பார்த்த போது, பெட்டகங்கள் உடைக்கப்பட்டு, பணியாளர்களின் நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ள விடயம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பணியாளர்களால் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

நுரையீரலில் கிருமித் தொற்று

## யாழில் நிமோனியா காரணமாக 3 மாதப் பெண் குழந்தை மரணம்

நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு நிமோனியா காரணமாக பிறந்து மூன்றரை மாதப் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

மூன்றரை மாத இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இதில் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சிவதாசன் றக்சிகா என்ற மூன்றரை மாதப் பெண் குழந்தையே உயிரிழந்தவராகும்.

நேற்று சனிக்கிழமை (20) காலை 6.00 மணியளவில் தாயார் குழந்தைக்குப் பால் ஊட்டி விட்டு படுத்தியதாகவும் காலை 8.00 மணியளவில் பார்த்தபோது பிள்ளை மூச்சு அயந்து காணப்பட்டதை அடுத்து உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு நிமோனியா ஏற்பட்டதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

திருகோணமலையில்

## எரிந்த நிலையில் சடலம் ஒன்று மீட்பு

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டாம் புளி எனும் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தினை, நேற்று மாலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த 53 வயதான சிவலிங்கம் ஜெயசீலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், விவசாயி ஒருவர் தனது வயலுக்குச் சென்ற வேளையில் எரிந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டதை அடுத்து தம்பலகாமம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, அவ்விடத்துக்கு வந்த தம்பலகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

கொழும்பு புறநகர்ப் பகுதியில்

## கை, கால் கட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று கண்டெடுப்பு

வத்தளை - எலகந்த பகுதியில் அமைந்துள்ள கால்வாயில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலமானது நேற்றுக் காலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

எலகந்த பகுதியில் அமைந்துள்ள கால்வாயில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொது மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பாதாளக் கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (19) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் மேலும் 29 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காலிப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரின் இந்த சுற்றிவளைப்பில் பாதாள உலகக்கும்பலை சேர்ந்தவரான 39 வயதுடைய நபரே கைதான வராவார்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் இதுவரை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 2,379 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

## சங்கடஹர சதுர்த்தி உத்ஸவம்

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உத்ஸவம் எதிர்வரும் புதன்கிழமை மாலை 3.30 க்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம்வருவார். பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-7)

## கதிர்காமக் கந்தனின் மகா பெரஹரா இன்று

(கதிர்காமம்)

வரலாற்றுச் சிறப்புமிகு கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று இரவு அதி சிறப்புமிகு மகா பெரஹரா உற்சவம் இடம்பெறவுள்ளது.

கந்தபுராணம் ஏமகூடம் எனப்போற்றும் கதிர்காம முருகன் ஆலய மகோற்சவமானது கடந்த 6ம் திகதி ஆரம்பமாகி நாளை மாணிக்க கங்கை நீர் வெட்டு உற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக்கோரி கையெழுத்து வேலைத்திட்டம் மன்னாரில் ஆரம்பம்

(மன்னார்)

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரி கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் நேற்று சனிக்கிழமை காலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக மக்களிடம் குறித்த கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் இயற்றப்பட வேண்டும்.

இவ்வாறு பொய்வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றமையால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது தொடர்பாக அனைத்து மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் குறித்த கையெழுத்துப் போராட்டம் நேற்று மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-285)

# சிறுபோகத்தினை இழந்த விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முரசுமோட்டையில் காணி பகிர்ந்தளிக்கப்படாததன் காரணமாக இவ்வாண்டுக்கான சிறுபோகத்தினை இழந்த விவசாயிகள் தமக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முரசுமோட்டைப் பகுதியில் 65 ஏக்கர் காணி விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாததன் காரணமாக சிறுபோகத்தினை இழந்த விவசாயிகளே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபோகத்தில் கிடைக்கின்ற நெல்லில்தான காலபோகத்திற்கான நெல்லினையும் பெற்றுக் கொள்வோம். தற்போது நாம் சிறுபோகத்தினை இழந்திருப்பதன் காரணமாக காலபோகத்திற்கான விதை நெல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சிறுபோகம் மேற்கொள்ளாததன் காரணமாக எமது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுபோகத்திற்கான இழப்பீடும் காலபோகத்திற்கான விதை நெல்லினையும் பெற்றுக் கொள்வதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முரசு மோட்டையில் சிறுபோகத்தினை இழந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

65 ஏக்கர் காணி சிறுபோகத்திற்கு எமக்கு பகிர்ந்தளிக்கப்படாத நிலையிலும் 120 இற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் முரசு மோட்டைப் பகுதியில் மேலதிக விதைப்பு தற்போது சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (நி-350)



கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் பிரதமரின் சாரணர் விருதிற்காக கடந்த வியாழக்கிழமை நடைப் பயணம் மேற் கொண்டுள்ளனர். (படம்:கிருஷ்ணகுமார்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3174

Search for people, places and things

### ராஜினி

தீபாவளிக்கு தான் ஊரெல்லாம் வெடியா இருக்கும்



ஆனால் வாழ்க்கையில் திரும்பும் பக்கம் எல்லாம் கன்னிவெடியாகவே இருக்கு

### லக்சனியா

போன் பண்ணினலர் உடனே எடுங்கடா



எதுக்கு போன் பண்ணினோம் என்று மறந்து போயிடுது

### றஜீனா

காலையில உடற்பயிற்சி செய்யிற மாதிரியும் ஆகி விட்டது



இட்லி தோசைக்கு மா ஆட்டின மாதிரியும் ஆச்சு.. 2 இன் 1

### குகபாலா

இட்லிக்கு நாலு வகையான சட்னி கிடைப்பது வரம்



ஆனால் அது பிரிட்ஜிலிருந்து கிடைப்பது சாபம்

### பிறிசில்லா

நல்லவேளை போனில பேட்டரி வைச்சாங்கள் போனுக்கு பெற்றோல் போடுற மாதிரி இருந்தால் நம்ம நிலைமை என்ன ஆகியிருக்கும்



### சதீஸ்

எது பேசினாலும் அடுத்த செக்கன்ட் மறந்து போகுது டொக்டர்

எத்தனை நாளாக இந்த பிரச்சினை?

எந்த பிரச்சினை டொக்டர்?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேர்தல்கள்...

காலம் தொடர்பில் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை அடுத்த வாரம் வெளியிடவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க முன்னதாகத் தெரிவித்திருந்தார்.(ம-7)

## யாழைச்...

அதிகமான பணத்தைக் கொள்ளையிட்டுள்ளதாக தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களினால் திருடப்பட்ட பொருட்களிலிருந்து இரண்டு மடிக்கணினிகள் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இத்தாலி விசா பெறுவதற்காக நால்வர் பணம் செலுத்தியிருந்த நிலையில், விசா வழங்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக வாக்குவாதம் ஏற்பட்டுள்ள நிலையில், திடீரென நிறுவனத்திற்குள் புகுந்த சிலர் இரும்புக் கம்பியால் தாக்கி சேதம் விளைவித்து 2000 ஸ்ரெலிங் பவுண்ட்ஸ்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## உடுவில்...

(வயது-45) என்ற ஆசிரியையே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## விஜயதாஸவின்...

பில் ரணில் - விஜயதாஸ இடையில் கருத்து மோதல் உருவாகியுள்ள நிலையில் விஜயதாஸவின் அமைச்சுப் பதவியைப் பறிக்க ரணில் முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட மூலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி மூலம் பிரசுரித்தமை தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தமது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக மக்கள் மத்தியில் நிச்சயமற்ற கருத்துக்கள் உருவாகுவதைத் தடுக்கவே உரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமல் இடைநிறுத்தி வைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷவின் அமைச்சுப் பதவியை உடனடியாகப் பறிக்க வேண்டுமென அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகவும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

என்றாலும், இத்தருணத்தில் விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினால் அது அரசாங்கத்துக்குப் பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் என்பதால் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்து அவராகவே அமைச்சுப் பதவியை துறக்கும் சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகவும் தெரியவருகிறது. (ம-7)

## தமிழ்ப்...

களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவிதப் பயனும் இல்லை எனத் தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந் நிலையில் இதற்கு பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் இதன் அடுத்த கட்டமாக அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகத்திற்கும் இடையில் முதலாவதாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டு உள்ளது. (ம-7)

## அதிபர்...

யடைந்தமையினால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சட்டப்படி தொழில் செய்யும் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தொழிற்சங்கங்களின் இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம-7)

## பளையில்...

அழித்து வருவது பற்றி வன இலாகவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் அங்கு சென்று யானையை விரட்டினராயினும் மீண்டும் அந்த யானை நேற்று முன்தினம் தர்மக்கேணியில் உள்ள பொன்னம்பலம் தோட்டத்துக்குள் நுழைந்து 300க்கும் மேற்பட்ட தென்னைகளை நாசம் செய்துள்ளது.

இதேவேளை குறித்த யானையை யாரேனும் அப்பகுதியில் கொண்டு வந்துவிட்டனரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து குறித்த யானையை அப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்த வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

## ஜனா..

சிங்கள ஊடக மொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் காணப்படுகின்றன. அரசியலமைப் பின் ரீதியாக, சட்ட ரீதியாக அதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 அல்லது 6 வருடங்களா என்பது தொடர்பிலான சிக்கலுக்கு தற்போது 22வது திருத்தச் சட்ட மூலத்திற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அது எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து 2/3 பெரும்பான்மை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை அமுல்படுத்துமாறு உத்தர விடப்படும்.

[illegible] தேர்தல்கள் ஆணைக்குழு நிச்சயமாக இணங்க வேண்டும். அதன் காரணமாகவே வாய்ப்புகள் இருப்பதாக கூறினேன்.

அவ்வாறு 2/3 பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியாமல் போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. அதற்கான வாய்ப்பும், அதிகாரமும் ஜனாதிபதியிடம் உண்டு என்றார். (ம-7)

# ஜனாதிபதித் தேர்தல்
# குதிரை சின்னத்தில் ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பொதுச் சின்னமாகக் குதிரைச் சின்னத்தைத் தேர்ந்தெடுக்கக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுக் கூட்டணியின் பெயர், சின்னம் என்பன பற்றிய இறுதிக்கட்ட கலந்துரையாடல் தற்போது இடம்பெற்று வருகின்றது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 5540
C 9 7 2 1 9 7
அதி சம்பத C 2 1 9 7
சீட்டிழுப்பு இலக்கம் 115

தன நிதானய
திகதி - 2024.07.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1570
M 05 11 34 54 M
26982

மெகா பவர்
திகதி 20/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1888
E 26 30 37 55 79
71933

லக்கி 7 VIP
திகதி 2024.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 366
A 8 9 4 1 2 0 A

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3782
சீட்டிழுப்பு திகதி 20.07.2024
S 09 14 25 68
S 73907

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.20
சீட்டிழுப்பு இலக்கம் 0849
தனுசு 04 06 09 13 தனுசு
56856 03

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.07.2024 வெற்றி வாரம் 248 வர்ணம் நீலம்
R 6 0 4 2 0 8
58723
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,977,380.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2514 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 20.07.2024 தினம் சனிக்கிழமை
17 45 61 64 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,864,788.80

சனிதா
திகதி 2024.07.20 வெற்றி வாரம் 4675
06 26 29 30 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,752,444.00
29927

சீட்டிழுப்பு வாரம் 4226 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.20 தினம் சனிக்கிழமை
27 34 46 55 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,228,923.60
529105

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 13 14 30 50 53
1690 சிவப்பு 20.07.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 534,211,166.20

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2340
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,019,189.60
ADA KOTIPATHI
06 18 51 63 Q
836864


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம். (1519)

தொடர்புகளுக்கு: **076 834 6136**

## SB TRAVELS AND TOURS(PVT) LTD

டுபாய், மலேசியா, இந்தியா, வியட்னாம் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்குமான வீசாக்களும் அத்துடன் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குமான வீசாக்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Air Ticketing, Travel Insurance, Travel Itinerary, Srilankan Visa Extension [வெளிநாட்டிற்கான இலங்கை வீசா புதுப்பித்தல்]

**HOTLINE NO : 075 555 9932**

Jaffna - 021 222 8555, 076 691 1082, 83
Colombo 13 - 011 233 3322, 076 6911089, 90
Colombo 15 - 011 254 0111, 077 108 3480, 81, 82, 83

Email : SBTRAVELSJAFFNA@GMAIL.COM

(C-328) CONDITION APPLIED

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna. (1489)

**T.P : 077 780 3970, 074 007 1970**

## விற்பனைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும், யாழ் K.K.S வீதியில் மனோகராத் தியட்டருக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ். திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் ஆடிய பாதம் வீதி முகப்புடன் 5 பரப்புக் காணியும், யாழ். பலாலி வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பு மாடி வீடும், யாழ். பிறவுண் வீதியில் நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும், யாழ் முதலாம் குறுக்குத் தெருவில் வேம்படி பாடசாலைக்கு அண்மையில் 12 பரப்புக் காணியும், யாழ் காந்தி வீதியில் 5 பரப்புக் காணியும் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக் குண்டு.

(C-831)

தொடர்பு:
**077 723 2535**

## பராமரிப்பாளர் தேவை

ஆதரவற்ற அரச ஊழியரை உணவளித்துப் பராமரிக்க ஆதரவின்றி தனித்து வறுமையில் வாழும் சிறிய குடும்பம்/ ஆதரவின்றித் தனித்து வறுமையில் வாழும் பெண் பராமரிப்பாளர் தேவை. பராமரிப்பு கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப்படும். முன்னுரிமை - சொந்த வீட்டில் வைத்துப் பராமரிக்க கூடியவர்கள். (1504)

**076 701 3330**
**077 880 4503**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## வேலைவாய்ப்பு

எமது WEC Export Import (PVT) Ltd நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- தரம் 10, O/L, A/L
தகுதிகாண் காலப்பகுதி சம்பளம்:- 29500 - 45000 வரை
உங்களுடைய முற்பதிவுக்கு உங்களுடைய பெயரினை 077 028 7429 இவ் இலக்கத்திற்கு அனுப்பவும். (176)

தொடர்புகளுக்கு:
**077 969 1759, 077 985 8580**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நவாலி ஆனைக்கோட்டை கூழாவடி (யாழ். மானிப்பாய் வீதி)வீட்டுடன் பரப்பு - 1 குழி 10.45 காணி விற்பனைக்கு உண்டு. தென்னை, மா, தேசி போன்ற பயன் தரு மரங்களும் உண்டு. உடன் குடியமர்வதற்கு ஏற்ற நிலையில் உள்ளது. (1514)

தொடர்பு: **074 178 3315**
**077 948 5437**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (1487)

Whatsapp: **077 756 3781**
Email: jenyjude77@yahoo.com

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள். (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0829)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## கடை விற்பனைக்குண்டு

K.K.S றோட்
மருதனார்மடத்தில்
36'x12' இல் அமைந்த
கடை விற்பனைக்குண்டு. (1503)

தொடர்பு:
**077 829 4182**

## மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும்

ROLEX. Omega மற்றும் பழையகால மணிக்கூடுகள் வாங்கப்படும்.
மரத்திலான சுவர் Clock (174)

**076 697 7346**
N0.08, Jubile Bazar (CTB Bus stand Opposite)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-0829)

## பராமரிப்பாளர் தேவை

முதியவர் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் ஒருவர் தேவை (1511)

**076 871 2788**
**004915 9024 81333**

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0829)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதி முகப்புடன் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- ✸ 1 பரப்பின் விலை - 10,00,000/= (10 இலட்சம்)
- ✸ நல்ல சூழல்.
- ✸ தரகர் தேவையில்லை.
- ✸ நாவற்குழி சந்தி ½ Km தூரம்.
- ✸ யாழ்ப்பாணத்திலிருந்து 3½ Km தூரம்.
- ✸ நாவற்குழி சிவன் கோயில் அருகாமை.

(1516)

தொடர்புகளுக்கு:-
**077 468 3354**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 248/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 282/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 395/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 680/= | |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 400 g நெஸ்டமோல்ட் | - 740/= | ~~780/=~~ |
| 750 g சுபோஷா சத்துமா | - 560/= | ~~590/=~~ |
| 500 ml விம் Liquid | - 310/= | ~~375/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 01 கற்பூரப் பெட்டி | - 250/= | ~~340/=~~ |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 01 Fortune சோயா | - 100/= | ~~165/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 54/= | ~~80/=~~ |

Max 02
400g Anchor
1020/=




~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(172)

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.